Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :263 ஆவணி 03 ஆம் நாள் புதன்கிழமை 19 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## 30,000 வாக்காளர்களை வடக்கு இழக்கும்?

### வலி.வடக்கில் விடுவிக்கப்படாத கிராமங்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவதால் ஆபத்து

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 19

2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கையின் போது, மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத வலி.வடக்கின் 21 கிராம அலுவலர் பிரிவுகளும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என்று தெரியவருகின்றது. இதன் காரணமாக 30 ஆயிரம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

23 >

## 100 கோடி ரூபாவை விழுங்கிய மின் தடை

கொழும்பு, ஓக.19

கெரவலப்பிட்டிய மின் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட 8 மணி நேர மின் தடை காரணமாக, 100 கோடி ரூபாவிலும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

பொதுவாக நாள் ஒன்றுக்கு 1.8 மில்லியன் மின்சார யுனிட்களும் இரவில் 2

23 >

## நாடளாவிய ரீதியில் சுழற்சி மின்வெட்டு!

யாழ்ப்பாணம், ஓக.19

நாடளாவிய ரீதியில் நேற்றுமுதல் தினமும் இரண்டே முக்கால் மணி நேரம் மின் துண்டிக்கப்படும் என்றும், எதிர்வரும் 4 நாள்களுக்கு இந்த நடைமுறை தொடரும் என்றும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக்

23 >

## மயங்கி வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக.19

வேலை செய்து கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து நேற்று உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் சுன்னாகம் வீதி, புத்தூர் மேற்கில் நடந்தது என்று அச்சுவேலிப்

23 >

### முச்சந்தி முரளி



'கந்தனுக்கு மட்டுமில்லை கள்ளருக்கும் கொரோனா என்டால் பயமில்லை போல!'

## நல்லூரில் சங்கிலி அறுத்த 'பலே' தம்பதி

யாழ்ப்பாணம், ஓக.19

நல்லூர் ஆலயத்தின் தீர்த்தோற்சவத்தில் வயோதிபப் பெண்ணிடம் சங்கிலி அறுத்துத் தப்பிக்க முயற்சித்த குற்றச்சாட்டில் கணவன், மனைவி கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

23 >

## 8 ஆண்டுகள் பணி முடித்தோர் மாற்றல் கோருவதால் சிக்கல்!

யாழ்ப்பாணம், ஓக. 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 8 ஆண்டுகளாகக் கடமையாற்றிய 30 இற்கு மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தமக்கு இடமாற்றம் வழங்குமாறு கோரியுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் இல்லாத நிலையில், இவர்களை எவ்வாறு

23 >

## யன்னலால் வீடு புகுந்து திருடர்கள் கைவரிசை!

### இரு பவுண் நகைகள் திருட்டு

வவுனியா, ஓக.19

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த இரண்டு பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டு நேற்றுமுன்தினம் நடந்துள்

23 >

## சந்நிதியானுக்கு இன்று கொடி

வடமராட்சி, ஓக. 19

வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் முதலாம் திகதி காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும், 2 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பொலிஸ்க்கு 'டிமிக்கி' விட்ட பிரபல கொள்ளையன் கைது!

### 4 மாதங்களாகத் தேடி பிடித்தது யாழ். பொலிஸ்

யாழ்ப்பாணம், ஓக.19

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல இடங்களில் கொள்ளையில் ஈடுபடும் கும்பலைச் சேர்ந்த முக்கிய நபர்

23 >

## தொண்டைமானாறு விபத்தில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஓக.19

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு 3ஆம் சந்தியில் நேற்று மாலை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஒருவர் காயமடைந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த உருத்திரன் திருவருட்செல்வன் (வயது-50)

23 >

## அங்கஜனின் மீது ஈ.பி.டி.பி. 'கரிசனை'

யாழ்ப்பாணம், ஓக. 19

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன்,

23 >

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி



மிகச்சிறந்த e-Learning பக்கேஜ்கள் மொபிடெல் இடமிருந்து
Office 365, MS Teams மற்றும் Zoom
25GB பக்கேஜ்
ரூபா. 150/-
+ வரிகள்
4G
Sri Lanka Telecom Mobitel

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காயப்பட்டவர் உயிரிழந்தார்

வவுனியா, ஓக.19

விபத்தில் காயமடைந்திருந்த இளைஞர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மல்லாவி பகுதியில் கடந்த 14ஆம் திகதி மடுவிலிருந்து மல்லாவி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் வீதியில் நின்ற மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகினர். அவர்களில் அதே பகுதியைச் சேர்ந்த தாணுயன் (வயது 19) மல்லாவி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை உயிரிழந்தார். மற்றையவர் சிறுகாயமடைந்திருந்தார்.

மல்லாவி பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த110)

# முன்னாள் போராளிகளுக்காக கூட்டமைப்பு குரல் கொடுக்கும்

## நம்பிக்கையூட்டுகின்றார் அடைக்கலநாதன் எம்.பி.



**மன்னார், ஓக.19**

**முன்னாள் போராளிகள் அச்சப்பட வேண்டாம். உங்களுக்காகக் குரல் கொடுக்க நாங்கள் இருக்கிறோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார்.**

புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் புலிகளை மீளுருவாக்கம் செய்து வருகின்றார்கள் என்று பாதுகாப்புச்செயலாளர் கூறியுள்ளார். இந்த நிலையில், அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடாது, தமிழர்களுக்கு தீர்வு கொடுக்கக்கூடாது என்றகாரணத்துக்காக புலிகளை மீண்டும் கொண்டு வருகிறார் பாதுகாப்புச் செயலர்.

அதற்காக ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து வாழும் முன்னாள் போராளிகளை தகவல் சேகரிப்பு என்று அவர்களின் விவரங்களை இராணுவத்தினர் பதிவுசெய்து வருகிறார்கள். இதனால் முன்னாள் போராளிகள் அச்சமடைந்துள்ளார்கள். இதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்ட போராளிகளை தொடர்ந்தும் அச்சநிலையில் வைத்திருக்கவே இந்த அரசு விரும்புகிறது. அதனால்தான் புலிகளின் மீளுருவாக்கம் பற்றியதாக பாதுகாப்பு அமைச்சின் செயலரின் கருத்து அமைகின்றது.

அரசு செய்யும் அச்சுறுத்தல்களைக் கண்டு முன்னாள் போராளிகளோ பொதுமக்களோ அச்சப்படத் தேவையில்லை. உங்களுக்காகக்குரல் கொடுப்பதற்கு நாங்கள் இருக்கின்றோம்.

அனைத்து முன்னாள் போராளிகளும் ஜனநாயக போராட்டத்தில் எம்மோடு ஒன்றிணைந்து உங்களைப் பலப்படுத்திக் கொள்வதன் மூலமே இவ்வாறான அச்சுறுத்தலிலிருந்து தப்பிக்க முடியும்.

சிங்கள மக்கள் இன்று ஒன்றிணைந்திருப்பது போன்று முன்னாள் போராளிகள் உட்பட தமிழ் மக்களின் நலனுக்காகச் செயற்படும் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும். என்று கோரிக்கை விடுத்தார்.

**வீட்டுத் திட்டம் பற்றி மஹிந்தவுக்கு கடிதம்**

வீடமைப்புத் திட்டத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச அமைச்சராக வுள்ளார்.

கடந்த அரசில் சஜித் பிரேமதாச வீடமைப்புத்துறை அமைச்சராக இருந்தார். அவருடைய காலத்தில் மக்கள் வீட்டுத் திட்டத்தை ஆரம்பிக்கின்ற போது 50 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு இலட்சம் ரூபா வரை மட்டுமே வீடமைக்க நிதி வழங்கப்பட்டது. ஆட்சி மாற்றம் காரணமாக குறித்த வீட்டுத் திட்ட பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. தொடங்கப்பட்ட வீடுகள் கட்டும் பணிகளை முடிக்க வேண்டும் என்பதற்காக வட்டிக்கு பணம் பெற்றுள்ளனர். உடமைகளை அடகு வைத்துள்ளனர். இதற்கு பிரதமர் நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று மேலும் தெரிவித்தார். (த213,56,)

# வீதியில் செல்வோரை விரட்டியடிக்கும் கழுகு!

## *பொலநறுவையில் சம்பவம்*

கொழும்பு, ஓக. 19

வீதியில் செல்லும் பொதுமக்களை விரட்டி விரட்டி தாக்கும் பருந்து பற்றிய செய்திகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

சம்பவம் பொலநறுவை மாவட்டம் பராக்கிரம சமுத்திர பகுதி அணைக்கட்டை அண்டிய பகுதிகளில் இடம்பெறுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த ஒளிப்படங்களும் சமூக ஊடகங்களில் பரவுகின்றன. பராக்கிரம சமுத்திர கரையோர உயர்ந்த மரங்களில் வாழும் இந்த பருந்து, அந்த வீதியால் செல்லும் பொதுமக்களை விரட்டி விரட்டித் தாக்குகின்றது என்று அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

இதனால் சிறியவர்களை அந்த வீதியில் தனியே செல்ல பெற்றோர் அனுமதிப்பதில்லை. எனினும், பொலநறுவை வனவிலங்கு அதிகாரிகள் தமக்கு அப்படியான முறைப்பாடு வரவில்லையென்று கூறி சம்பவத்தை மறுக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# சில இறக்குமதிகளுக்கு விரைவில் தடை

கொழும்பு, ஓக. 19

செத்தல் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் மசாலாப் பொருள்களின் இறக்குமதிக்கு எதிர்காலத்தில் கட்டுப்பாடு விதிக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

சோளம், பாசிப்பயறு, கௌபி, உளுந்து, எள்ளு, மிளகு, இஞ்சி மற்றும் மஞ்சள் உள்ளிட்ட உப உணவுப் பொருள்களின் இறக்குமதிக்கு ஏற்கனவே கட்டுப்பாடுகள்விதிக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சின் செயலர், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா தெரிவித்துள்ளார்.

எந்தக் காரணத்துக்காகவும் குறித்த பொருள்களின் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. எதிர்வரும் பெரும்போக அறுவடையை ஆராய்ந்ததன் பின்னரே, எதிர்வரும் நாள்களில் இறக்குமதிக்கு தடை விதிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# நவக்கிரியில் கசிப்புடன் கைது



யாழ்ப்பாணம் புத்தூர் நவக்கிரி 54ஆவது வீட்டுத்திட்டத்தில் கசிப்புக் காய்ச்சி விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

அதே பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவரையே காங்கேசன்துறை விஷேட குற்றத்தடுப்புப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஒன்றரை லீற்றர் கசிப்பு போதைப் பானமும் கைப்பற்றப்பட்டது. அவருக்கு எதிராக குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (த25)

# விநாயகர் ச.ச.நிலையத்தில் உடைமைகள் தீயால் நாசம்



யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு சாந்தை கிராமத்தில் விநாயகர் சனசமூக நிலையத்தில் நேற்று தீ பரவியதால் உடைமைகள் நாசமாகிவிட்டன என்று தெரிவிக்கப்பட்டது. விசமிகளேதீவைத்துள்ளனர்என்று நிலையத்தினர் தெரிவித்தனர்.

நேற்று மாலை 2.30 அளவில் சம்பவம் இடம்பெற்றது.

இதனால் 75 க்கும் மேற்பட்ட கதிரைகள், மின் இணைப்புக்கள் மற்றும் கூரைப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளன.

16/06/1960 ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த சனசமூக நிலையம் 60 வருடங்கள் பழமை வாய்ந்தது. இது பற்றி இளவாலை பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த20, 25)

# துஸ்பிரயோக வழக்குகள் இனி விரைவில் நிறைவுறும்

## கூறுகின்றார் நீதி அமைச்சர்

இலங்கையில் ஒவ்வொரு இரண்டு மணி நேரத்துக்கும் ஒரு சிறுவர் அல்லது சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றார். இது தொடர்பான வழக்குகள் தீர்ப்பளிக்கப்பட சுமார் 10 தொடக்கம் 15 ஆண்டுகள் ஆகின்றன. இதுபோன்ற வழக்குகளை தாமதமின்றி தீர்ப்பதற்கு தான் அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பேன் என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நேற்று முன்தினம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காணி வழக்கு ஒன்றைத் தீர்ப்பதற்கு சுமார் 25 ஆண்டுகள் ஆகின்றன என்றும், தனது சட்டத்தரணி தொழிலில் 25 ஆண்டுகளில் இந்த நாட்டு மக்கள் அனுபவித்த துன்பங்களைக் கண்டேன் என்றும் அவர் தெரிவித்தார். (த)

# கொழும்பு செல்கின்றன மீனாட்சிபுர எலும்புகள்!

## பெண் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம்

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்ப்பாணத்தின் புறநகர்ப் பகுதியான பண்ணை மீனாட்சிபுரத்தில் மீட்கப்பட்ட மனித எலும்பு எச்சங்கள் மேலதிக பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணியின்போது பெண் ஒருவரினது என்று நம்பப்படும் கால் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

அந்த இடத்தில் பற்பசை பக்கட், பல் விளக்கும் பிறஸ், சீப்பு, பவுடர் பேணி, 3 மேற்சட்டைகள், பாவாடை ஒன்று உள்ளிட்டவை துணியிலான கைப்பையில் காணப்பட்டுள்ளன. அதனால் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு அந்த இடத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. நிபுணத்துவ ஆய்வு ஊடாகவே மனித எச்சங்கள் எந்தக் காலப் பகுதிக்குரியவை என்பது உறுதிப்படுத்தப்பட்டு விசாரணைகளை முன்னெடுத்து உண்மை நிலைமையைக் கண்டறிய முடியும் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் முகாம் இருந்து விடுவிக்கப்பட்ட பகுதியிலிருந்தே இந்த மனித எலும்பு எச்சங்கள் கடந்த வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டன. இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதற்கு அமைவாக, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டதுடன், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நீதிவானின் அனுமதியுடன் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கப் பணித்திருந்தார். அதற்கு அமைவாக அகழ்வுப் பணிகள் நேற்று முன்னெடுக்க ப்பட்டன. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்டமருத்துவ அதிகாரி, யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் முன்னிலையில் அகழ்வுப் பணி நடைபெற்றது. (ஒ,5,106)

# நாடாளுமன்றம் செல்ல பிள்ளையானுக்கு அனுமதி



கொழும்பு, ஓக.19

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இம்முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன், நாளை நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கு, மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான சிவநேசத்துரை சந்திரகாந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை வழக்கில் 3ஆவது சந்தேகநபராக மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்க மறியலில் இருந்து வருகின்றார். இந்தநிலையில், அவர் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கு அனுமதி கோரி பிள்ளையானின் சட்டத்தரணிகளால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நகர்வு மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இந்த நகர்வு மனுவை ஆராய்ந்த மட்டக்களப்பு மேல் நீதிமன்ற மேலதிக நீதிபதி டி. சூசைதாசன், சிவநேசத்துரை சந்திரகாந்தனை நாளை நாடாளுமன்ற அமர்வில் பூரணமாகக் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கினார். அதையடுத்து பிள்ளையானை, மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரிகள் நாடாளுமன்ற அமர்வுக்காக அழைத்துச் செல்லவுள்ளனர். (எ-22)

# விசாரணையில் சம்பந்தன், ரணில்!

கொழும்பு, ஓக.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டோருக்கு ஜனாதிபதி ஆணைக் குழுவில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 7ஆம் திகதி அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவர்களுடன், மங்கள சமரவீர, பாட்டலி சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா, அனுரகுமார திசாநாயக்க, ரவுப் ஹக்கீம் உள்ளிட்ட மேலும் பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

# அமைச்சின் நிபந்தனைகளுடன் சகல வகுப்புகளையும் நடத்தவும்

கொழும்பு, ஓக. 19

கொவிட் 19 தொற்று காரணமாக விடுமுறை வழங்கப்பட்ட அரச பாடசாலைகள் மற்றும் அரச அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கும் செயற்பாடு தொடர்பில் அமைச்சின் நிபந்தனைகளைப் பின்பற்றி சகல வகுப்புகளையும் ஆரம்பிக்கலாம். கடந்த 28 ஆம் திகதி கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்களுடன் பின்வரும் விடயங்களும் சேர்த்து நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் கல்வி அமைச்சின் செயலர் பணித்துள்ளார்.

பாடசாலையின் மொத்த மாணவர் எண்ணிக்கை 200க்கும் அதிகமாகவும், சுகாதார அமைச்சின் மூலம் வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைகளை அனுசரித்து ஒரு மீற்றர் மாணவர் இடைவெளி மற்றும் தனிநபர் இடைவெளி பேணக் கூடியதும் மற்றும் போதியளவான வகுப்பறைகள், ஆசிரியர்கள் உள்ளனர் என்றால் எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி வழங்கும் நோக்குடன் அவ்வாறான பாடசாலையின் அனைத்துத் தரங்களையும் ஆரம்பிக்க முடியும்.

குறித்த கடிதத்தில் உள்ளடங்கிய ஏனைய விடயங்களும் தொட ர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்று கல்வி அமைச்சின் செயலர் என்.எச்.எம்.சித்திரா னந்த தெரிவித்துள்ளார். (து)

# முன்னாள் ஆணையாளர் சடலமாக மீட்பு

கொழும்பு, ஓக. 19

பரீட்சைகள் திணைக்கள முன்னாள் ஆணையாளர் நாயகம் மஹிந்த விஜேசிறி அவருடைய காரில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தனது தனிப்பட்ட வியாபாரத்துக்காக கஹதுடுவவிலிருந்து நுகேகொவுக்குச் சென்று கொண்டிருந்தபோது ஹொரனகெஸ்பேவ பிரதான வீதியில் சம்பவம் இடம் பெற்றது. இவரது நோய் காரணமாக அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவர் 2000 - 2004 வரை பரீட்சைகள் ஆணையாளராக பணியாற்றினார் என்று தெரிவிக்கப்பட்டது. (து)

# மயிலிட்டியில் மீண்ட துப்பாக்கி ரவைகள்

யாழ்ப்பாணம், ஓக. 19

மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட மயிலிட்டி பகுதியில் தனியார் காணி ஒன்றிலிருந்து ஒரு தொகுதி துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்.

காணியை அதன் உரிமையாளர் கனரக வாகனத்தின் உதவியுடன் நேற்றுத் துப்பரவுசெய்தபோதே, மண்ணுக்குள் புதைந்திருந்த நிலையில் அவை வெளிவந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட ரவைககள் ரீ-56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படுபவை. இது பற்றி இராணுவத்தினர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். பொலிஸ் விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினர் மூலமாக அவற்றை மீட்கும் நடவடிக்கை இடம்பெறுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (து-25)

# சகல பஸ்களையும் இன்றிலிருந்து கழுவுங்கள்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஓக. 19

மிகச் சிறியதோர் ஆரம்பத்திலிருந்து பெரிய மாற்றத்தை செய்ய முடியும். பஸ் வண்டிகளை கழுவி சுத்தம் செய்து பிரயாணிகளுக்கு பயணிப்பதற்கான ஒழுங்குகளை நாளைய தினமே (இன்று) ஆரம்பியுங்கள் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சு மற்றும் வாகனங்களை ஒழுங்குபடுத்தல், பேருந்து போக்குவரத்துச் சேவைகள் மற்றும் ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டம் குறித்து ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தது.

சுவரொட்டிகளை ஒட்டுவதை நிறுத்துவதற்கு மேற்கொண்ட சிறியதொரு தீர்மானம் நாட்டின் அனைத்து நகரங்களையும் சுத்தமாக வைத்திருப்பதற்கு வழிவகுத்திருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைத்து துறைகளினதும் அபிவிருத்தியை மிகச் சிறிய இடத்திலிருந்து ஆரம்பிக்க முடியுமென்று குறிப்பிட்டார்.

மோட்டார் கார்களில் வந்து அதனை நிறுத்திவிட்டு பஸ் வண்டிகளில் பணி இடங்களுக்கு செல்லும் முறைமையை விரைவாக நடைமுறைப்படுத்தி வீதி நெரிசலை தீர்க்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

போக்குவரத்து சபை பஸ் போக்குவரத்து சேவையை ஒரு சேவையாக நடத்திச் சென்றாலும் நட்டம் அடையாத நிறுவனமாக இருக்க வேண்டும். கிராமிய பகுதிகளில் பஸ் போக்குவரத்து தொடர்பாக அரச மற்றும் தனியார் துறைகள் கவனம் செலுத்த வேண்டும்

ரயில் மற்றும் பஸ் வண்டிகள் இணைந்த சேவையையும் பஸ் வண்டிகள் இணைந்த பயண நேரசூசியையும் உடனடியாக ஆரம்பியுங்கள். போக்குவரத்து துறையை மேம்படுத்துவதற்காக முதலில் தீர்வுகளை வழங்கக்கூடிய துறைகளை இனங்காண்பது அவசியம். எதிர்வரும் ஐந்து வருடங்களில் போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்கு குறுகிய கால மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (து)

# என் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு!

## அதிரடி காட்ட தயாராகும் மைத்திரி



**கொழும்பு, ஓக. 19**
**பல தகுதி நிலைகளைக் கொண்டுள்ள எனக்கு அமைச்சுப் பதவி வழங்கியிருக்க வேண்டுமா? இல்லையா? என்பதை அரசுதான் சிந்தித்திருக்க வேண்டும். இதைவிட மேலதிகமாக எதுவும் பேச நான் விரும்பவில்லை. எனினும், இறுதியாக ஒன்றைக் கூற விரும்புகின்றேன் அதாவது என் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் பொலனறுவை மாவட்டத்திலிருந்து இம்முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ளவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான புதிய அரசின் அமைச்சரவையில் மைத்திரிபால சிறிசேனவுக்கு அமைச்சுப் பதவி எதுவும் வழங்கப்படவில்லை. இது தொடர்பில் அவரிடம் வினவிய போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்தாவது,
நான் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி. முன்னாள் அமைச்சர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். தேசிய கட்சியொன்றின் முன்னாள் பொதுச்செயலர். அக்கட்சியின் இந்நாள் தலைவர். மீண்டும் பொலனறுவை மாவட்டத்திலிருந்து அதிக வாக்குகளுடன் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளேன். இப்படியான பல தகுதி நிலைகளைக் கொண்டுள்ள எனக்கு அமைச்சுப் பதவி வழங்கியிருக்க வேண்டுமா? இல்லையா? என்பதை அரசுதான் சிந்தித்திருக்க வேண்டும். இதைவிட மேலதிகமாக எதுவும் பேச நான் விரும்பவில்லை. எனினும், இறுதியாக ஒன்றைக் கூற விரும்புகின்றேன் அதாவது என் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு, என்றார்.
'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தங்கள் மீது குற்றச்சாட்டுக்கள் இருப்பதால் அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்று தேசிய ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன. இந்தக் காரணம் உண்மையா? என்று மைத்திரிபாலவிடம் வினவியபோது,
நான் நாட்டில் இல்லாத வேளை உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் எப்படி நிகழ்ந்தது என்பதையும், தாக்குதலைத் தடுக்காமல் யார் தவறிழைத்துள்ளார்கள் என்பதையும் ஏற்கனவே பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டேன். இந்த நிலையில், ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவினரால் எதிர்வரும் வாரம் நான் வாக்குமூலம் அளிக்க அழைக்கப்பட்டுள்ளேன். என் மீது எவரும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கலாம். ஆனால், என் மீதான எந்தக் குற்றச்சாட்டுக்களும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை. உங்கள் கேள்வியின் பிரகாரம் குற்றச்சாட்டுக்கள் எதிலும் சிக்காதவர்களுக்குத்தான் இம்முறை அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது என்றால் அது வேடிக்கையானது என்று பதிலளித்தார். (ஒ.5,22)

# சிறப்பு அதிரடிப் படைகளின் பாதுகாப்பின் கீழ் சிறைகள்!

## அடுத்த வாரம் முதல் நடைமுறை

கொழும்பு, ஓக.19
சிறைச்சாலைகளின் பாதுகாப்புக்காகப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரைப் பயன்படுத்தும் நடவடிக்கை, எதிர்வரும் வாரம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, பாதுகாப்பு அமைச்சால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார். பொலிஸ் விசேட அதிரடிப்படையினரைப் பயன்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.
சிறைச்சாலை மதில்களின் மேலால் சட்டவிரோதமாக பொருள்கள் சிறைச்சாலைகளினுள் வீசப்பட்ட சம்பவங்கள் அண்மைக் காலத்தில் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பான சம்பவங்களில் பலர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சூழ்நிலையில் சிறைச்சாலைகளுக்கு வெளியே பாதுகாப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நிறுத்தப்படவுள்ளனர். சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பது உட்பட சிறைச்சாலைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதே இதன் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5,22)

# நாகர்கோவில் கடற்கரையில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம் , ஓக. 19
வடமராட்சி நாகர்கோவில் கடற்கரையில் வாடி ஒன்றிலிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்று மாலை தொழிலுக்குச் சென்ற மீனவர்கள், அந்த வாடிக்குள் புதைந்த நிலையில் கைக்குண்டு இருப்பதைக் கண்ட பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அங்கு சென்ற பொலிஸார் அதை மீட்டனர். (கு25, 26)

# சவூதியில் இலங்கையர் சாவு நால்வர் கைது

கொழும்பு, ஓக. 19
சவூதி அரேபியாவில் இலங்கையைச் சேர்ந்த ஒருவரைக் கொன்றிருக்கலாம் என்ற சந்தேகத்தில் நான்கு இலங்கையர்களை சவூதிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
உயிரிழந்தவர் காலி ரத்கமவில் வசிக்கும் கந்தாகே பிரியந்த (வயது-42) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.
அவர் 15ஆம் திகதி இவர் தவறான முடிவெடுத்துக் கொண்டார் என்று கூறப்பட்டது. ஆனால், பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில், கைதுசெய்யப்பட்டவர்கள் குறித்த தகவல்களை வழங்குமாறு சவூதி அரேபியாவில் உள்ள இலங்கை தூதரகத்தின் தொழிலாளர் ஆலோசகர் மாதவ தேசபிரிய இலங்கை வெளிவிவகார அமைச்சகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (கு)

# பகிடிவதை தொடர்பில் கடினமான கொள்கை

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.19
பல்கலைக் கழகங்களில் முன்னெடுக்கப்படும் பகிடிவதை தொடர்பில் கடினமான கொள்கைத் திட்டங்களைப் பின்பற்ற வேண்டும். நவீன உலகக்குப் பொருந்தும் கல்வித் திட்டத்தை உருவாக்க அனைத்துத் தரப்பினரது கருத்துக்களிலும் அவதானம் செலுத்துவது அவசியம். இவ்வாறு கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள், உயர்கல்வி அமைச்சு அதிகாரிகள், பல்கலைக் கழக உபவேந்தர்கள் மற்றும் தேசிய கல்வியல் கல்லூரிகளின் பீடாதிபதிகளுடன் நடத்திய சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது. கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக மூடப்பட்ட பல்கலைக்கழகங்கள் மீண்டும் ஆரம்பித்தல் மற்றும் அதன் செயற்பாடுகளை தொடர்ந்தும் நடத்தி செல்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.
பல்கலைக்கழக உபவேந்தர்களுடனான கலந்துரையாடலின் போது பெற்றோர் மற்றும் சமூகத்தில் முதலிடத்தில் பேசப்படும் விடயமாக பல்கலைக்கழக பகிடிவதைதொடர்பில்விசேட அவதானம் செலுத்தப்பட்டது. பகிடிவதை தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது கடுமையான கொள்கைகளைபின்பற்றுதலின்அவசியம் தொடர்பாகவும் பேசப்பட்டது.
தேசிய கல்வியற் கல்லூரிகளின் பீடாதிபதிகளுடனான சந்திப்பின் போது கல்வியற் கல்லூரியில் நடைமுறையில் உள்ள கற்கைநெறி மற்றும் கற்பித்தல் முறைமைகளில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பழைய மாணவர்களின் சங்கத்தினரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. (எ)



# இடியன் துப்பாக்கிகள் எஸ்.ரி.எவ்வால் மீட்பு

கிளிநொச்சி, ஓக.19
இயக்கச்சி கோவில் வயல் பகுதியில் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 இடியன் துப்பாக்கிகள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.
கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சி கோவில் வயல் பகுதியில் உள்ள பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 இடியன் துப்பாக்கிகள் கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலுக்கமைய மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இருப்பினும் சந்தேக நபர்கள் யாரும் கைதுசெய்யப்படவில்லை. சான்றுப் பொருள்கள் பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5,6)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழ் தலைமைகளின் ஐக்கியம்

அண்மைய நாள்களில் தமிழ்த் தலைமைகளுக்கிடையே ஒரு ஐக்கியமான சூழலை உருவாக்கி, எமது உரிமைப் போராட்டத்தை வலிமையுடன் முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு அவசியம், பலதரப்பினராலும் உணரப்பட்டுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற சக்திகள் தனித்தனியே பிரிந்து நின்று போட்டியிட்டதால் தமிழர் பலம் சிதறடிக்கப்பட்டது. தமிழ்த் தரப்புக்கள் ஒருவருடன் ஒருவர் மல்லுக்கட்டிக் கொண்டிருந்த காரணத்தால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அவநம்பிக்கை, விரக்தி என்பவை காரணமாக அரச தரப்பினரும் அவர்களின் ஆதரவுச் சக்திகளும் கணிசமான வெற்றியைப் பெற முடிந்தது. தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கு பகுதிகளில் இந்த மூன்று கட்சிகள் பெற்ற வாக்குகளைவிட, அரச தரப்பினரும் அவர்களின் ஆதரவாளர்களும் அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

இப்படியான ஒரு சூழலிலேயே ஐக்கியத்துக்கான முயற்சிகள் ஆரம்பமாகின. அவ்வகையில் தமிழ் உணர்வாளர்களான ஒரு மருத்துவர்கள் குழு, சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகளுடன் சந்திப்புக்களை மேற்கொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோருடன் மேற்கொண்ட சந்திப்புக்கான ஒவ்வொன்றும் பல மணிநேரம் நீடித்த போதும் அதில் பேசப்பட்டவைகள் தொடர்பாகவோ, எட்டப்பட்ட முடிவுகள் பற்றியோ விபரமான தகவல்கள் வெளிவரவில்லை. அதையடுத்து மருத்துவர்கள் குழு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களைச் சந்தித்தனர். அப்போது அவர் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடுவதற்குத் தான் எப்போதும் ஆதரவளிக்கத் தயாரெனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழ்த் தேசிய விரோத அரசியலையும் விடுதலைப் புலிகள் நீக்க அரசியலையும் முன்னெடுத்த வர்களைப் புறமொதுக்கி ஒரு ஐக்கியம் உருவாக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார். இன்னொருபுறம் கொள்கை அடிப்படையிலான ஒரு ஐக்கியத்தின் கீழ் இணைந்து செயற்படத் தயாரென முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். செல்வம் அடைக்கலநாதனும் ஐக்கியத்துக்கான தனது ஆதரவைத் தெரிவித்திருந்தார்.

சிங்கள பௌத்த பேரினவாதம் சிங்கள மக்கள் மத்தியில் மக்கள் மயப்படுத்தப்பட்டு விட்ட நிலையில் பொதுஜன பெரமுனவின் தலைமையிலான குழுவினர் சிங்கள மக்களின் மிகப் பலம் பெற்ற தலைமையாக அரச அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளனர். இந்த நிலையில் ஏற்கனவே தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும், இன அழிப்பு நடவடிக்கைகளுக்கும் நீதியைப் பெற முடியாது என்பது மட்டுமன்றி ஒடுக்குமுறை நடவடிக்கை மேலும் மேலும் வலுவான முறையில் அதிகரிக்கப்படுவதற்கான அறிகுறிகளும் தென்பட ஆரம்பித்து விட்டன.

இப்படியான நிலையில் எம்மை நாமே பாதுகாக்க எம்மிடம் உள்ள ஒரே ஆயுதம் ஐக்கியம் மட்டுமே. தமிழ் மக்கள் ஒரே தலைமையில் திரண்டு எமது உரிமைப் போராட்டத்தையும் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களையும் முன்னெடுப்பது மட்டுமே எமக்குள்ள ஒரே வழி.

ஆனால் அந்த ஐக்கியம் எப்படி அமைய வேண்டுமென்பதுதான் முக்கியமான விடயமாகும். அதாவது தமிழ்த் தேசிய நலன்களை முன்னெடுத்துச் செல்வதில் எவ்வித விட்டுக் கொடுப்புகளோ, தடப்புரள்வுகளோ இல்லாத உறுதியான கொள்கையுடன் எமக்குச் சாதகமான பாதகமான சகல விடயங்களையும் தந்திரோபாய அடிப்படையில் கையாளக்கூடிய வகையிலான ஒரு ஐக்கியமாக அது அமைய வேண்டும்.

அவ்வாறான ஒரு ஐக்கியம் அமைய வேண்டுமானால், தமிழ்த் தலைமைகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் உருவாக்கப்பட்ட ஐக்கியம் ஏன் சிதைக்கப்பட்டது என்பதை ஒவ்வொரு தரப்பும் திறந்த மனதுடன் தம்மையும் மற்றவர்களையும் தமிழ்த் தேசிய நலன்களின் அடிப்படையில் விமர்சிக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு காலத்துக்குக் காலம் வெளியேறியவர்கள் ஏன் வெளியேறினார்கள் என்பது ஆராயப்பட்டு அதற்கான காரணங்கள் களையப்பட வேண்டும். அவர்கள் தாங்களாக வெளியேறும் வகையில் காய்களை நகர்த்தியவர்களை இனம்கண்டு புறமொதுக்க வேண்டும். இப்படியான முறையில் கொள்கை அடிப்படையில் ஒரு ஐக்கியம் உருவாக்கப்படுவதே எமது விமோசனத்துக்கான ஒரே மார்க்கமாகும்.

# குட்டித் தேர்தலுக்குத் தயார்! ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



**கொழும்பு, ஓக. 19**
**எந்நேரத்தில் வேண்டுமானாலும் மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கின்றது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு தயாராகிவிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் புதிய முறைப்படி நடைபெறுமா அல்லது பழைய முறைப்படி நடைபெறுமா என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை. எது எப்படியிருந்தாலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு எமது அணி தயார்.
அதேவேளை, பொதுத்தேர்தலின்போது மதத்தையும், இனத்தையும் முன்னிலைப்படுத்தி பரப்புரை மேற்கொண்டே ஆளுங்கட்சி வெற்றிபெற்றது. அரசியலுக்கான இனத்தையும், மதத்தையும் முதலிடுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமல்ல. எனவே, இனியாவது அவ்வாறு செய்யாமல் கொள்கை அரசியலை நடத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

(ஒ,5,44)

## பெல்வத்தை மின்கட்டமைப்பில் மோசடி இடம்பெற்றிருக்கலாம்!!

*மின்தடையை அடுத்து சந்தேகம்*

கொழும்பு, ஓக. 19
இலங்கை முழுவதும் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மின்தடைக்கு, பெல்வத்தை மின்கட்டமைப்பை சீரமைக்கும்போது ஏற்பட்ட மோசடி காரணமாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.
மின்சார தடை ஏற்பட்டமைக்கு முக்கிய காரணம் மின்சார கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு எனக் கூறப்படுகின்றது. எனினும் அதற்கு மேலதிகமாகவும் சில பிரச்சினைகள் இருக்கலாம் என மின்சார சபையின் பொறியியலாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.
2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி மார்ச் மாதம் 13ஆம் திகதி நாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டது. இதனையடுத்து 2018ஆம் ஆண்டு 300 கோடி ரூபாய் செல வில் பெல்வத்தையிலுள்ள மின்சார கட்டமைப்பு மறுசீரமைப்பு செய்யப்பட்டது. இந்த கட்டமைப்பிலும் சில மோசடிகள் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டப்பட்டுள்ளது. (ம)

## மின்தடை விசாரணை நேற்று ஆரம்பமானது!

கொழும்பு, ஓக. 19
நாட்டில் நேற்றுமுன்தினம் திடீரென ஏற்பட்ட மின்சார விநியோகத்தடை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு, நேற்றையதினம் கூடி ஆராய்ந்துள்ளது.
எதிர்வரும் ஒரு வாரத்திற்குள் சம்பவம் தொடர்பான அறிக்கையை முன்வைப்பதற்கு எதிர்பார்ப்பதாக மின்சக்திதுறை அமைச்சின் பேச்சாளர் சுலக்சண ஜயவர்தன தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவத்திற்கான காரணத்தை உரிய முறையில் கண்டறிவதுடன், இதற்கு முன்னர் ஏற்பட்ட இதுபோன்ற நிலைமைகளில் கையாளப்பட்ட நடவடிக்கை என்பன தொடர்பில் ஆராய்வது இந்தக் குழுவின் பணியாக உள்ளது.
அதேநேரம், எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும், இந்தக்குழு ஆராய உள்ளது. இந்தநிலையில், அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராயப்படுகின்ற நிலையில், அது குறித்து தற்போது கருத்துத் தெரிவிக்க முடியாது என்று மின்சக்தி துறை அமைச்சின் பேச்சாளர் சுலக்சண ஜயவர்தன தெரிவித்துள்ளார். (ம)



## விளையாட்டுத்துறையை பொறுப்பெடுத்தார் நாமல்!

கொழும்பு, ஓக. 19
புதிய அரசின் விளையாட்டுத்துறை அமைச்சராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நாமல் ராஜபக்ச, தமது கடமைகளை நேற்று செவ்வாய்க்கிழமை பொறுப்பேற்றார்.
ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல், நேற்றுக் காலை டொரிங்டனிலுள்ள விளையாட்டு அமைச்சில், புதிய இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக கடமைகளைப் பொறுப்பேற்றார்.
இதன் போது இஸ்லாம் மற்றும் இந்து மத குருமார்களினால் அவர் ஆசீர்வதிக்கப்பட்டார். இந்த நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக் ஷ மற்றும் ஏராளமான அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ம)

## பிள்ளைகள் நால்வர் தந்தையால் துஷ்பிரயோகம்

*பொலிஸாரிடம் தாயார் முறைப்பாடு*


கொழும்பு, ஓக. 19
தனது நான்கு பிள்ளைகளையும் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் தந்தையொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் பிள்ளைகளின் தாயார் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கெலிஓயா பகுதியிலுள்ள இராணுவ முகாமில் பணியாற்றிய 38 வயதான சந்தேகநபரே கைதாகியுள்ளார். அவர் சில காலமாக பிள்ளைகளைத் துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளார். எனினும், அச்சம் காரணமாக தாயார் முறைப்பாடு செய்யாமல் இருந்தார். எனினும், கணவரின் சில்மிஷங்கள் அதிகரித்துச் சென்றதையடுத்து அவர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார். 5, 8 மற்றும் 16 வயது மகள்கள் மூவருடன், 12 வயதான மகனையும் அவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ம)

# இராணுவத்தை ஒருபோதிலும் காட்டிக்கொடுக்கமாட்டோம்!

## வெளிவிவகார அமைச்சர் திட்டவட்டம்

**கொழும்பு, ஓக. 19**

**சர்வதேசத்தின் எந்தவொரு நாடும் இலங்கைக்கு எதிரியில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, நாட்டின் இறையாண்மைக்கும் அரசமைப்புக்கும், போர்வெற்றி வீரர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான எந்தவொரு கடப்பாட்டினதும் பங்காளியாக இலங்கை இருக்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ தலைமையிலான புதிய அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள தினேஷ் குணவர்தன நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை வெளிவிவகார அமைச்சில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது தேசிய ரீதியில் நாம் மிகவும் முக்கியமான தருணத்தில் இருக்கின்றோம். உறுதியானதும், நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலானதுமான நாட்டின் பயணமொன்றுக்காக மக்கள் கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவுக்குத் தமது ஆணையை வழங்கினார்கள். அதன் பின்னர் அண்மையில் நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் முன்னரை விடவும் அதிகமான ஆதரவை மக்கள் காண்பித்திருக்கின்றார்கள். தற்போதைய தேர்தல் முறைமையின் கீழ் உலகின் எந்தவொரு நாட்டிலும் அரசாங்கம் இத்தகைய மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டதில்லை. அல்லது அவ்வாறு நிகழ்ந்த சம்பவங்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. அவ்வாறிருக்க அத்தகைய பெரும்பான்மை ஆணையொன்றையே மக்கள் எமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

பாதுகாப்பானதும் ஸ்திரமானதுமான நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்கு முதலில் பலமான அரசாங்கமும் வலுவான மக்கள் ஆணையும் மிகவும் அவசியமாகும். சர்வதேசத்தின் நம்பிக்கையை வலுப்படுத்திக்கொள்வதற்கும் அது இன்றியமையாததாகும்.

அந்தவகையில் நாம் சர்வதேச நாடுகளுடன் சிறந்ததொரு வெளிநாட்டுக் கொள்கையைப் பேணுவதை முன்னிறுத்தி அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.

அதேபோன்று கடந்த 100 வருட காலப்பகுதியில் தற்போது மிகப் பெரியதொரு சுகாதார நெருக்கடி நிலைக்கு முகங்கொடுத்திருக்கி றோம். கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலையடுத்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 'முதலில் மக்களின் உயிரைப் பாதுகாக்க வேண்டும். பின்னர் வீழ்ச்சியடைந்த ஏனைய துறைகளைக் கட்டியெழுப்பலாம்' என்ற கொள்கையை முன்வைத்தார். அதன்படி அனைவரும் ஒருமித்துச் செயற்பட்டு, இன்றளவில் கொரோனா வைரஸ் பரவலை முறியடிப்பதில் நாம் ஒரு நாடாக வெற்றிக்கண்டிருக்கிறோம். என்றார். (ப)

## ரிஷாத் பதியுதீனின் அதிசொகுசு ஓய்வறை கண்டுபிடிப்பு

கொழும்பு, ஓக.19

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பயன்படுத்திய அதிசொகுசு ஓய்வறை ஒன்று, கொழும்பு வொக்ஷோல் வீதியில் மொத்த கூட்டுறவு விற்பனை நிலைய கட்ட தொகுதியின் 8ஆவது மாடியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ் ஓய்வறையில், அதிசொகுசுடன் கூடிய நித்திரைகொள்ளும் அறை அறைக்கு வெளியே காணப்பட்ட பிரிதோர் இடத்தில் அதிக விலைகொண்ட சாய்வு கதிரை ஒன்றும், புதிய தொழிநுட்பத்தினாலான ஒலி, ஒளிக்கருவிகள் மற்றும் ப்ரொஜெக்டர் என அழைக்கப்படும் காணொலி கருவி என்பன மீட்கப்பட்டுள்ளன.

இவ் ஓய்வறையை அந்த இடத்திலிருந்து முழுமையாக அகற்றுமாறு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன பணிப்புரை விடுத்தார். அதேசமயம் இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த ஓய்வறை தாம் அமைச்சு பதவியைப் பொறுப்பேற்றதற்கு முன்னரே அமைக்கப்பட்டது என்று முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். (ரி3)

## கட்டுநாயக்கவில் குறிப்பிட்ட சில நாடுகளுக்கே விமான சேவை

கொழும்பு, ஓக.19



தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளுக்கு மாத்திரம் கட்டுநாயக்க விமான நிலையத்தைத் திறப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. செப்ரெம்பர் மாதம் முதல் கட்டுநாயக்க விமான நிலையம் திறக்கப் பட்ட பின்னர் தெரிவுசெய்யப்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. கொரோனா வைரஸ் தொற்றினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளைத் தவிர்த்து கொரோனா அச்சுறுத்தல் இல்லாத நாடுகளுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது. எனினும் கட்டுநாயக்க விமான நிலையத்தைத் திறக்கும் திகதி குறித்து இன்னமும் அரசாங்கம் உறுதியான தீர்மானத்துக்கு வரவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது. விமான நிலையத்தை மீண்டும் திறப்பது மற்றும் எந்த நாடுகளின் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைப்பது என்பது குறித்து கலந்துரையாடல் மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (ரி2)

## 305 இலங்கையர்கள் நாட்டை வந்தடைவு

ஜோர்தான் மற்றும் கட்டார் நாடுகளிலிருந்து 305 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி டோஹாவிலிருந்து கட்டார் எயார்வேஸ் விமான சேவைக்குச் சொந்தமான QR668 என்ற விமானத்தில் பணிபுரியும் 20 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 1.40 மணியளவில் நாடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை ஜோர்தானின், அம்மானிலிருந்து ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் விமானம் மூலமாக 285 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 4.35 மணிக்கு கட்டுநாயக்க, சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். (ரி3)

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை சின்னத்துரை

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கட்டுடை மானிப்பாய், கொழும்பு, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னத்துரை நேற்று (18.08.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சுபத்திரை (பொன்குட்டி)யின் அன்புக் கணவரும், சர்வேஸ்வரன் (சரா), பத்தரட்சகன் (றூபன்), வரதராஜன் (விமலன்), பகீரதன் (பவன்), பாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், யமுனா ராணி, உதயகுமாரி, மாலதி, ராஜகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனும், சங்கீதா, சதுர்சன், சந்தியா, சக்தி, பூஜா, றாம், ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2020) வியாழக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சுபத்திர மஹால்"
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:-
குடும்பத்தினர்
077 674 2013







வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தீர்தோற்சவம் நேற்றுக் காலை 5.30 மணியளவில் முருகப்பெருமானின் ஷண்முக தீர்த்தக்கேணியில் சிறப்பாக நடைபெற்றது. (ஐ)





வராலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் கொடியிறக்க உற்சவம் நேற்றுக் மாலை சிறப்பாக நடைபெற்றது. (ஐ)




## நல்லூரான் சிறப்பம்சம்

### நல்லைப் பதியானை பணிந்தெழுவோம் நாளுமே...

அலங்காரக் கந்தனின் அழகு முகம் கண்டேன்
அழகன் முருகனிடம் அருள் வேண்டி நின்றேன்
ஆராத காதலொடு அவன் பாதம் பணிந்தேன்
ஆனைமுகன் தம்பியிடம் மனமுருகி நின்றேன்
நல்லைமா நகர் வாழும் நல்லூர்க் கந்தனை
நல்லையற் பதியானை பணிந்தெழுவோம் நாளுமே
(அலங்காரக்)

இரு மாதர் புடைசூழ மாமயிலின் மீதமர்ந்து
இருளடர்ந்த ஆணவத்தின் இருட் பிணிப்பை நீக்கிடவே
ஈசன் உமையாளின் இளையமகன் முருகனாய்
ஈராறு கரமுடைய ஆறு முகத்தான் அவன்
நல்லை மாநகர் நல்லூர்க் கந்தனை
நல்லையம் பதியானை பணிந்தெழுவோம் நாளுமே
(அலங்காரக்)

உயர்ந்த கோபுரத்தின் கலசமணி ஒலிக்க
உகங்கள் தோறும் வேதநெறி யோங்க
ஊருலகமெங்கும் நல்லூரான் பேர் சொல்ல
ஊடுறு மூழ்வினைகள் பறந்தோடி விடுமே
நல்லை மாநகர் வாழும் நல்லூர்க் கந்தனை
நல்லையம் பதியானை பணிந்தெழுவோம் நாளுமே
(அலங்காரக்)

எட்டுத் திக்கெங்கும் காவடிகள் எடுத்தாடி வர
எல்லையிலா எழிலழகன் நல்லூர்க் கந்தனுக்கு
ஏழிசையும் திருமுறையும் செந்தமிழால் பாடிடவே
ஏது வரினும் நினைக்கினும் மேகமெனத் திகழ்ந்திடுவான்
நல்லை மாநகர் வாழும் நல்லூர்க் கந்தனை
நல்லையம் பதியானை பணிந்தெழுவோம் நாளுமே
(அலங்காரக்)

ஐயன் சிவனார்க்குப் பொருளுரைத்தப் பாலனவன்
ஐந்துமொன்று ஆறாகி அணைத்து அருள் சுரப்பான்
ஒன்பது வாசல் கோபுரத்தினுள்ளிருந்து- நல்லூரான்
ஒளி திகழும் வேலோடு தேரேறி வலம் வருவான்
நல்லை மாநகர் வாழும் நல்லூர்க் கந்தனை
நல்லையம் பதியானை பணிந்தெழுவோம் நாளுமே
(அலங்காரக்)

ஓங்கு புகழ் சரவணப் பொய்கையில் உதித்தவா
ஓவியமாய் காவியமாய் தித்திக்கும் செந்தமிழால்
ஔவைக்குச் சுட்டப் பழத்தின் பொருளுரைத்த குமரா
ஔடதப் பொருளாகி மருந்தாகி அருள்வாய்
நல்லை மாநகர் வாழும் நல்லூர்க் கந்தனை
நல்லையம் பதியானை பணிந்தெழுவோம் நாளுமே
(அலங்காரக்)

*திருமதி சு.வள்ளியமை, சாவகச்சேரி.*



# சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த இராணுவத்தின் உதவியைப் பெற முடிவு

**கிளிநொச்சி, ஓக. 19**
**கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க இராணுவத்தின் உதவியை நாடவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடர் முகாமைத்துவம் தொடர்பில் ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் ஊடகங்கள் உட்பட பலரும் எங்களின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர். குறிப்பாக இரணைமடுக் குளத்தின் கீழான சட்டவிரோத மணல் அகழ்வால் குளத்துக்குப் பாதிப்பு ஏற்படலாம். இதனைக் கட்டுப்படுத்த இராணுவத்தின் உதவியை பெறவுள்ளோம். இது தொடர்பில் இன்று புதன் கிழமை கிளிநொச்சி படைகளின் கட்டளைத் தளபதியை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம், என்றார். கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு, பன்னங்கண்டி, கண்டாவளை, பெரியகுளம், கல்லாறு, தட்டுவன்கொட்டி, ஊற்றுப்புலம், அக்கராயன், கிளாலி, முகமாலை, சோரன்பற்று, புளோப்பளை, மற்றும் பளையின் மேலும் பல பிரதேசங்கள் உட்பட பல இடங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5,214,6)

---

அரசநிதி முறைகேடு தொடர்பில்:

## ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான விசாரணைகள் நிறைவு



கொழும்பு, ஓக.19
2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்காக, தனது ஆதரவாளர்களை புத்தளத்திலிருந்து மன்னாருக்கு அழைத்துச் செல்ல அரச பேருந்தை பயன்படுத்தியமை தொடர்பாக, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான விசாரணைகளை சி.ஐ.டி.யினர் நிறைவுசெய்துள்ளனர்.

விசாரணையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனக் குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ரிஷாத் பதியுதீன் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 222 பஸ்களை பயன்படுத்தி, ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க புத்தளத்திலிருந்து தனது ஆதரவாளர்களை மன்னாருக்கு அழைத்துச் சென்றமை சி.ஐ.டி.யின் விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த நேரத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராக இருந்த ரிஷாத் பதியூதீன் 25 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான அமைச்சின் பணத்தைச் செலவிட்டதாகவும் கூறப்படுகிறது. (ரி2)

---

## அனுமதியின்றி மரம் வெட்டியவர் கைது

கிளிநொச்சி,ஓக.19
கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மயில்வாகனபுரம் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் சந்தேகநபர் ஒருவர் வனவளப் பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார். (ரி1-113)

---

## வாகன மோசடி; ஒருவர் கைது

கொழும்பு, ஓக19
வாகன விற்பனை நிலையமொன்றிலிருந்து போலி இலக்கத்தகடுகளுடன் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த இரண்டு வாகனங்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். பலாங்கொடை பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளின்போதே அந்த வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாகன விற்பனை நிலையத்தில் லொறி ஒன்றும் ஜீப் ஒன்றுமே இவ்வாறு போலி இலக்கத்தகடுகளுடன் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி1)

---

## ருவன் வாக்குமூலம்! மைத்திரிக்கு அழைப்பு



கொழும்பு,ஓக.19
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ஆராயும் விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் வாக்குமூலம் வழங்குவதற்காக, முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன நேற்று முன்னிலையாகினார். இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் எதிர்வரும் 26 ஆம் திகதி முன்னிலையாகி, வாக்குமூலம் வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோரை எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகுமாறு கடந்த வாரம் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-22)

---

## தினேஷ், ஜோன்ஸ்டன் இருவருக்கும் புதிய பொறுப்புக்கள்

கொழும்பு, ஓக.19
நாடாளுமன்றத்தில் தினேஷ் குணவர்தன மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோருக்கு புதிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி நாடாளுமன்றத்தின் புதிய சபை முதல்வராக தினேஷ் குணவர்தன வும், ஆளும் கட்சியின் பிரதம கொறடாவாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் நியமிக்கப்பட்டுள்ளார்.(ரி2)



---


## பாதாள உலக, போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு அமெரிக்க சிறைச்சாலையை ஒத்த சிறைச்சாலை

கொழும்பு, ஓக.19
பாதாள உலக மற்றும் போதைப்பொருள் குற்றவாளிகளைத் தடுத்து வைப்பதற்காக அமெரிக்காவின் " அல்கட்ராஸ்" சிறைச்சாலை போன்ற சிறைச்சாலையை நிர்மாணிக்க இலங்கை அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

நாளுக்கு நாள் அதிகரிக்கும் குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள்கள் சமூகத்தில் பரவுவதைத் தடுக்கும் நோக்கிலும், இலங்கையில் செயற்படும் போதைப்பொருள் கடத்தல் குழுக்களின் தலைவர்கள் மற்றும் பெரும் குற்றச்செயல் களுடன் சம்பந்தப்பட்ட பாதாள உலகக் குழுத் தலைவர்களைத் தடுத்து வைக்கும் நோக்கிலும் இந்தச் சிறைச்சாலை நிர்மாணிக்கப்படவுள்ளது. நிர்வாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றக்கூடிய சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட விசேட அதிரடிப்படையின் அதிகாரிகளை இந்த சிறைச்சாலை நிர்வாகத்திற்கு நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறைச்சாலையில், பாதுகாப்பு கமராக்கள் பொருத்திய கட்டமைப்பு மற்றும் கையடக்கத் தொலைபேசி அலைத்தடுப்பு கருவி, கட்டமைப்பு என்பவற்றையும் ஏற்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் சென் பிரான்சிஸ்கோ வளைகுடாவில் இருந்து 1.25 கடல் மைல் தொலைவில் உள்ள அல்கட்ராஸ் தீவில் மிகப்பெரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை தடுத்து வைப்பதற்காக பிரத்தியேகமான சிறைச்சாலை என்பது குறிப்பிடத்தக்கது. (ரி3)



# இன்றைய நாள்

**மேடம்:** அறிவுப் பூர்வமாக செயல்படும் நாள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். வியாபாரத்தை இடம் மாற்றுவீர்கள். பணியாளர்களின் மரியாதை கூடும்.

**இடபம்:** மன மகிழ்ச்சி கூடும் நாள். உடல்நலம் மேம்படும். பணியில் கவனச்சிதறல் ஏற்படக்கூடும். பணியிடத்தில் சில தவறான முடிவுகளை எடுக்க நேரிடும். பெண்கள் எதிர்பார்த்த நன்மைகளை பெறுவர்.

**மிதுனம்:** உற்சாகமடையும் நாள். பிறருக்காக கடினமாக உழைக்க வேண்டி வரும். குடும்ப மகிழ்ச்சி நிலைக்கும். புதியவரின் நட்பால் நன்மை உண்டு. வழிபாட்டு நம்பிக்கை கூடும்.

**கடகம்:** நிம்மதி மீளும் நாள். வாக்குவாதங்கள் குறையும். எதிலும் அவசர முடிவுகள் வேண்டாம். நண்பர்களை நம்பியது வீண்போகாது. பணியா ளர்களின் வேலைச்சுமை குறையும். கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்பு வரும்.

**சிம்மம்:** ஏற்றம் பெறும் நாள். வியாபாரத்தில் வளர்ச்சி காணலாம். கலைஞர்களுக்கு வெற்றி வரும். கூட்டுத் தொழில் லாபம் தரும். எழுத்தாளர்கள் வளர்ச்சி காண்பார்கள்.

**கன்னி:** அமைதியான நாள். வேலையாட்களின் ஒத்துழைப்பால் தொழில் செழிக்கும். சகாக்கள் ஒத்துழைப்பார்கள். பணியாளர்கள் நிம்மதி காண்பீர்கள். குடும்பத்தில் நல்ல விஷயங்கள் நிறைவேறும்.

**துலாம்:** பரபரப்பான நாள். எதிரிகளைப் பக்குவமாகச் சமாளிப்பீர்கள். தொழிலில் புதிய பணியாளர்களைச் சேர்ப்பீர்கள். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**விருச்சிகம்:** குடும்ப ஒற்றுமை பலப்படும் நாள். வெளிநாட்டு முயற்சியில் வெற்றி கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். நல்ல செய்தி ஒன்று வரும். வியாபாரத்தில் தொட்டது துலங்கும்.

**தனுசு:** மன அமைதி குறையும் நாள். எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படும். கோபத்தை குறையுங்கள். என்றைக்கோ பேசியவற்றால் இன்றைக்குத் தொல்லைக்கு ஆளாகக்கூடும்.

**மகரம்:** கவலை தரும் நாள். நிதி விவகாரங்களில் கவனம் தேவை. மன அமைதிக்கு தியானம் செய்யவும். பணியாளர்கள் யாரிடமும் குரல் உயர்த்தி வாதிட வேண்டாம்.

**கும்பம்:** சுபச்செய்தி வரும் நாள். உங்களைப் பற்றிப் பெருமையடையும் செய்தி வரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வுக்குச் சற்று காத்திருக்கவும்.


**மீனம்:** மனதுக்கு இனிய சம்பவங்கள் நிகழும் நாள். பெரியவர்களின் ஆசிகள் கிடைக்கும். கலைஞர்கள் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு நன்மை காண்பீர்கள்.

### வவுனியா நகரில் அதிகரித்துவரும்

# திருட்டுக்களைத் தடுப்பதற்கு வர்த்தக சங்கம் நடவடிக்கை

வவுனியா, ஓக.19

வவுனியா நகரில் கடந்த சில நாள்களாக அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ்சலால் டி சில்வாவிடம் வவுனியா வர்த்தகர் சங்கத்தினர் விசேட கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.



கண்டி வீதியில் அமைந்துள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலயத்தில் வர்த்தகர் சங்கத்தினரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ்ஸலால் டி சில்வாவுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. வவுனியா நகரில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்கு பொலிஸார் ஒத்துழைப்புக்களைத் தரவேண்டும். குறிப்பாக இரவு நேரங்களில் நடமாடும் பொலிஸாரை சேவையில் ஈடுபடுத்தி சந்தேகத்திற்கிடமாகச் செல்லும் வாகனங்களை பரிசோதனைக்குட்படுத்த வேண்டும் அத்துடன் சிசிரிவி பொருத்தும் எமது செயற்பாட்டிற்கு ஒத்துழைப்புக்களையும் தருமாறு வர்த்தகர் சங்கத்தினால் கோரிக்கை விடுக்கப் பட்டிருந்தது.

அதன் பிரகாரம் இரவு நேரங்களில் நடமாடும் பொலிஸாரை அதிகளவில் சேவையில் ஈடுபடுத்துவது எனவும் சிசிரிவி பொருத்தும் வர்த்தகர் சங்கத்தின் செயற்பாட்டிற்கு பூரண ஆதரவை வழங்குவதாகவும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ்சலால் டி சில்வா உத்தரவாதம் அளித்திருந்தார்.

வவுனியா நகரில் கடந்த 5 நாள்களுக்குள் மாத்திரம் நான்கு கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் திருப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. எனினும், இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி1-18)

### சுமார் 3 இலட்சம் பெறுமதியான

# கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது

புத்தளம், ஓக.19



பாலாவி கரம்பை பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் இருவர் விமா னப்படையின் இரகசியப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இலக்கத் தகடு அற்ற மோட்டார் சைக்கிள் ஒன்றில் கேரளக் கஞ்சா எடுத்துச் செல்லப்படுவதாக விமானப் படையின் இரகசியப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், சந்தேகத்திற்கிடமான மோட்டார் சைக்கிளைப் பரிசோதனை செய்தபோதே கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான 4 கிலோ 250 கிராம் கேரளக் கஞ்சா இரண்டு பைகளில் பொதி செய்யப்பட்டிருந்தநிலையில் மீட்கப்பட்டுள்ளது. பாலாவி கரம்பை நாயக்கர் சேனைப் பகுதியில் விற்பனை செய்யும் நோக்கில் இந்த கேரளக் கஞ்சா எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது என விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பன வற்றுடன் மேலதிக சட்ட நடவ டிக்கைகளுக்காக புத்தளம் பிரிவு போதை பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ரி3)

# போதைப்பொருள் மோசடி; அதிகாரிகளுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக.19

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்துடன் இணைக்கப்பட்ட 13 அதிகாரிகளுக்குமான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருட்களை, போதைப்பொருள் மோசடிகளுக்காக மீண்டும் விற்பனை செய்த குற்றச்சாட்டுக்காக இவர்கள் கைதுசெய்யப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந் நிலையில் அவர்களை மீண்டும் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவர்களுக்கான விளக்கமறியல் ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. இந்த உத்தரவை கொழும்பு நீதிவான் நீதிமன்ற தலைமை நீதிபதி லங்கா ஜயரட்ன பிறப்பித்தார். (ரி1)

### விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள

# பாதாள உலகக் குழுவினருக்கு எதிரான சிறப்பு விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக.19

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் சிலர் முன்னெடுத்த போதைப்பொருள் வர்த்தக நடவடிக்கைகளுக்கு, உதவிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சுரேஷ்குமார் உள்ளிட்ட நான்கு பாதாள உலகத்தவர்களுக்கு எதிராக சிறப்பு விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பேலியகொடை பொலிஸாரால் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் எம். லும்தெனியவுக்கு விசேட அறிக்கை ஊடாக அறிவித்தனர். பாதாள உலகத் தலைவர்களாகக் கருதப்படும் சுரேஷ் குமார், பிரபாத் மதுசங்க, பல்லேவல லசந்த சஞ்ஜீவ, தொடம்கொடவடுகே கெலும் சம்பத் ஆகிய நான்கு பேருக்கு எதிராகவே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மனிதப் படுகொலை, போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் கப்பம் கோரல் தொடர்பில் இவர்களுக்கு எதிராக இந்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என பேலிய கொடை பொலிஸார் நீதிவானுக்கு அறிவித்தனர். (ரி2)

## சிறைச்சாலைக்குள் மர்மமாக இறந்த சந்தேகநபர்

### உடற்கூற்று பரிசோதனைக்கு மினுவங்கொட நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஓக.19
நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். சந்தேகநபரின் இறப்புக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.
மரதகஹமுல ஹபுவலான பகுதியில் வீடொன்றுக்குள் கொள்ளையிடப்பதற்காகச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் தற்போது உயிரிழந்த நபர் உட்பட மேலும் ஒருவரை பிரதேச மக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து அந்த இருவரையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இருவரும் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் என்று தெரிவித்தே இவ்வாறு கொள்ளையடிப்பதற்கு முயற்சித்துள்ளனர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது. சந்தேகநபர்கள் மினுவங்கொட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு ஒகஸ்ட் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்
வழக்கு விசாரணைகள் நேற்று நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சந்தேகநபர்களில் ஒருவர் விளக்கமறியலில் இருக்கும் போது உயிரிழந்துவிட்டார் என சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். இரண்டாவது சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் 2 இலட்சம் ரூபா மற்றும் சரீரப் பிணையில் விடுவிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. இந்த வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஒக்ரோபர் 6ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
மர்மமான முறையில் உயிரிழந்த சந்தேகநபரின் பிரேத பரிசோதனைகள் நேற்று நீர்கொழும்பு மருத்துவமனையில் இடம்பெற்றன. (ப)

### முஸ்லிம்கள் மீது குத்தப்பட்டுள்ள

## ஸஹ்ரான் முத்திரையை அகற்ற வேண்டும் சப்ரி!

### அபயதிஸ்ஸ தேரர் கூறுகிறார்

**கொழும்பு, ஓக. 19**
**முஸ்லிம் மக்கள் மீது குத்தப்பட்டுள்ள ஸஹ்ரான் முத்திரையை அப்புறப்படுத்த வேண்டியது நீதி அமைச்சரின் கடமை என்று தெரிவித்தார் கலாநிதி மெதகொட அபயதிஸ்ஸ தேரர்.**

நீதி அமைச்சராக சப்ரி நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார். இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்த தாவது:
நாட்டில் வாழும் அனைவருக்கும் ஒரேபாடசாலைக் கட்டமைப்பு, ஒரே சட்டம் உருவாக்கப்படுமாயின் அது எதிர்காலத்தில் ஸஹ்ரான்கள் உருவாகாமல் இருப்பதற்கு சிறந்த நடவடிக்கையாக இருக்கும். முஸ்லிம் மக்கள் மீது குத்தப்பட்டுள்ள ஸஹ்ரான் முத்திரையை அப்புறப்படுத்த வேண்டியது நீதி அமைச்சரின் கடமை - என்றார். (ம)

## விபத்தில் பெண் பலி

கொழும்பு, ஓக. 19
மாஹவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாதெனிய அநுராதபுரம் வீதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.
அநுராதபுரம் நோக்கிச் சென்ற ஜீப்பொன்று வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது. அந்த ஜீப்பின் சாரதி தூக்கக் கலக்கத்தில் வாகனம் செலுத்தியமையே விபத்துக்கான காரணமென பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.
விபத்தில் காயமடைந்த ஜீப்பின் சாரதி மற்றும் முன்னாலிருந்து பயணித்த பெண் இருவரும் மாஹவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பயனின்றி பெண் உயிரிழந்தார். (ம)

## 19ஆவது திருத்தம் திருத்தப்படவேண்டும்

### ஹேஷா வித்தானகே எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 19
அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தில் ஒருசில விடயங்கள் திருத்தப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா வித்தானகே தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 19 ஆவது அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டம், சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பன நீக்கப்படாமல் இருக்க வேண்டும். எனினும், மாற்றப்படவேண்டிய சில விடயங்கள் இருக்கின்றன. எனவே, தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அப்பாற்சென்று அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி முயற்சிக்க மாட்டார் என நாம் நம்பிக்கை கொள்கிறோம் - என்றார். (ப)

### தேசியப் பட்டியல் ஆசன விவகாரம்;

## சிறுபான்மைக் கட்சிகளுக்கு சஜித் துரோகம் இழைப்பு

### ஹுனைஸ் பாரூக் குற்றச்சாட்டு

தேர்தலுக்கு முன்னர் சிறுபான்மைக் கட்சிகள் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமைக்காக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியிடம் எவ்வாறு ஒப்பந்தம் செய்யப்பட்டதோ அந்த ஒப்பந்தத்தை ஐக்கிய மக்கள் சக்தியின்தலைவர்சஜித்பிரேமதாச மீறியுள்ளார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் தெரிவித்தார்.
மன்னாரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஜனநாயகத்தை விரும்புபவர்கள் இந்த ஆட்சியில் வெறுப்பைக் கொண்டவர்கள், அதேபோன்று இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்குஇருக்கின்றஅந்தச்சட்டத்தை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனையில் உள்ளவர்கள் என்னசெய்தார்கள்என்றால்ஐக்கிய மக்கள்சக்திக்குஇம்முறைதுணிந்து வாக்களித்தார்கள். எனவே இதன் நிமித் தம் தான் இரண்டு ஆசனங்களை ஐக்கிய மக்கள் சக்தி வன்னி மாவட்டத்தில் பெற்றுக்கொள்ள இருந்தும்ஒருசில வாக்குகளினால் இரண்டாவது ஆசனம் கிடைக்காமல்போனது. சஜித் பிரேமதாசவின் கட்சிக்கு ஆதரவளித்து, வந்த வாக்குகளைப்பார்க்கும்போதுமூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமானவாக்குகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மனோ கணேசனுடைய கூட்டமைப்பு ஆகியன பெற்றுள்ளன.
அரசாங்கத்தை விட சஜித் சிறுபான்மை இன மக்கள் மத்தியில் இரக்கம் கொண்டவர் என்ற அடிப்படையிலேயே தான் இந்த வாக்குகளை வழங்கினார்கள். ஆனால் தேர்தல் முடிவடைந்த பின்பு எவ்வாறு தேர்தலுக்கு முன்னர் இந்தச் சிறுபான்மைக் கட்சிகள் அவரிடம் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமைக்காக ஒப்பந்தம் செய்துகொண்டார்களோ அந்த ஒப்பந்தத்தை அவர் மீறி இருக்கின்றமை அப்பட்டமாகத் தெரிகின்றது.
சிறுபான்மைக்கட்சித்தலைமைகள் சஜித் பிரேமதாசவின் அலுவலகத்தில் தேசிய பட்டியலுக்காக காத்துக் கிடப்பதைப் பார்க்கும் போது உண்மையில் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கின்ற அல்லது எதிர் காலத்தில் சிறுபான்மை மக்களுக்கு இவர் உதவுவதாக அல்லது அந்தமக்களுக்கு காப்பீடாக அமைவாரா? என்ற ஒரு கேள்வியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.
இந்த விடயத்தில் மிகவும் அவதானமாகவும் கவனமாகவும் சஜித் பிரேமதாச முன்னெடுக்கின்ற பட்சத்தில் தான் எதிர் காலத்தில் இந்தக் கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லலாம்- என்றார். (ப-56)

## மலேசியாவிலிருந்து வந்த 880 பொதிகள் அஞ்சல் திணைக்களத்தில்

கொழும்பு, ஓக. 19
மலேசியாவிலிருந்து அனுப்பப்பட்ட 880 பொதிகள், உரியவர்களிடம் கையளிக்க முடியாமல் அஞ்சல் துறையில் கிடப்பில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
பொதிகளில் உள்ள முகவரிகள் அழிவடைந்ததால், அவை சில காலமாக அஞ்சல் திணைக்களத்தில் சிக்கிக் கிடக்கின்றன என கூறப்படுகிறது
இலங்கையில் ஒன்லைன் கொள்முதல் என்று கூறப்படும் பொதிகள், இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள கொவிட்19 தொற்றுநோய் மற்றும் முடக்கம் காரணமாக தேங்கி விட்டன.
பொதிகளின் அழிவடைந்த முகவரிகளை மீட்டெடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக அஞ்சல் துறை தெரிவித்துள்ளது. முன்னதாக, மலேசியாவிலிருந்து அழிவடைந்த முகவரிகளுடன் கிட்டத்தட்ட 45 ஆயிரம் பொதிகள் தபால்துறையில் சிக்கி விட்டன. 5000 மட்டுமே உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன. பொதிகளின் பார்கோட்டைப் பயன்படுத்தி முகவரிகளைக் கண்டுபிடிக்க உதவுமாறு அஞ்சல் துறை மலேசியாவின் தபால் துறையிடம் கோரியிருந்தது. சிலர் முறைப்பாடு செய்துள்ளது போல், தபால் ஊழியர்களால் பொதிகள் திருடப்படவில்லை என்று திணைக்களம் மேலும் தெளிவுபடுத்தியுள்ளது. (ப)

# பட்டதாரிகளின் பாடங்களுக்கு அமைவாக வேலைவாய்ப்பு

## ஜனாதிபதி பணிப்பு



**கொழும்பு, ஓக.19**

**தகைமை பெற்றுள்ள பட்டதாரிகள் கற்றுள்ள பாடவிதானங்களுக்கு அமைய அந்தந்த துறைகளில் தொழிலில் அமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார்.**

செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேரை தொழிலில் அமர்த்தும் நிகழ்த் தித்திட்டம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, குறைந்த வருமானம் உடையவர்களுக்கான ஒரு இலட்சம் வேலை வாய்ப்புக்கு தகுதியானவர்களை தேர்ந்தெடுக்கும் போது அனைத்து கிராம சேவை பிரிவுகளிலும் இருந்து வறுமை நிலையில் அதி கூடியவர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரச சேவையில் நிலவும் பலவீனங்கள் மற்றும் குறைபாடு களை ஒழிக்கும் வகையில் தொழிலில் உள்ளவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவது அவசியம். தனியார் துறையிலும் பயிற்சிகளுக்காக இணைக்கப்படுவர். தலைமைத்துவம், இலக்கை அடைதல், நம்பிக்கை உணர்வு என்ற விடயங்களை முக்கியத்துவப்படுத்தி ஒரு வருட கால பயிற்சி நெறிக்கு உள்வாங்கப்பட வேண்டும் என்றும் குறிப் பிட்டார். புதிய இராஜாங்க அமைச்சுக்களின் இலக்கை அடைந்துகொள்வதற்காக தொழில் பெற்ற பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். பொதுத் தேர்தலுக்காக பல மாவட்டங்களில் மேற்கொண்ட விஜயத்தின்போது பலர் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் குறைபாடுகள் பற்றியும் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினர்.

புதிய நியமனம் பெற்றவர்களை அதற்காக நியமிப்பதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஒரு இலட்சம் வேலை வாய்ப்புக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்கள் 24 தொழில்துறைகளில் நிலவுகின்ற பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக நியமிக்கப்படுவர் என்பது குறிப்பி டத்தக்கது. (ரி1)

# தொண்டமானின் பூர்வீக இல்லத்தில் திடீர் தீப்பரவல்

கொத்மலை, ஓக.19

கொத்மலை வேவன்டனிலுள்ள மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் பூர்வீக இல்லத்தில் நேற்று திடீரென தீப்பர வல் ஏற்பட்டுள்ளது.

அதிகாலை 2.30 அளவில் ஏற்பட்ட இந்தத் தீ அனர்த்தத்தில் வீட்டின் கூரை முழுமையாகச் சேதமடைந்துள்ளது என கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா தீயணைப்புப் படைப் பிரிவுக்குச் சொந்தமான தீயணைப்பு வாகனத்தைப் பயன்படுத்தி, இத் தீப்பரவலைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆறுமுகன் தொண்டமானின் புதல்வனான, இராஜாங்க அமைச்சர். ஜீவன் தொண்டமான் உட்பட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் சம்பவ இடத்தில் குவிந்தனர்.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த தீ அனர்த்தம் காரணமாக, வேவன்டன் இல்லத்துக்கு பெரிய சேதம் ஏற்பட்டுள்ளது என வும், உடைமைகள் பலவும் சேதமடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரி2)



# போலி நாணயத்தாள்களுடன் மூவர் கைது

முல்லேரியா, ஓக.19

பொலிஸ் விசேட அதிரடைப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் முல்லேரியாவில் போலி நாணயத் தாள்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகத்திற்கிடமான வாகனமொன்றை நிறுத்தி சோதனையிட்ட பொலிஸ் விசேட அதிரடைப் படையினர், அந்த வாகனத்திலிருந்து 128 போலி 5000 ரூபா நாணயத்தாள்களை மீட்டுள்ளனர். வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைதானவர்கள் 34, 36 மற்றும் 42 வயதான ஜாஎலா, அங்கோடா மற்றும் முல்லேரிய பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# ரஸீகிக்கு ஆதரவாக வலுக்கும் கோஷம்

கொழும்பு, ஓக.19

ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரும் சமூகவலைத்தள செயற்பாட்டாளருமான ரம்ஸி ரஸீக்கினால் அவரது பேஸ்புக் பக்கத்தில் செய்யப்பட்ட பதிவொன்றுக்காக, அவர் கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சுமார் 120 நாள்களுக்கும் மேலாக விசாரணைகளின்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில், அவர் நிபந்தனைகள் எதுவுமின்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று அவருக்கு ஆதரவாக கோஷம் சமூகவலைத்தளங்களில் கோஷங்கள் வலுத்து வருகின்றன.

சமூகவலைத்தள செயற்பாட்டாளரான ரம்ஸி ரஸீக்கின் மீது சுமத்தப்பட்டிருக்கும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் நீக்கப்பட்டு, எவ்வித நிபந்தனைகளுமின்றி அவர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று ஏற்கனவே சர்வதேச மன்னிப்புச்சபை குறிப்பிட்டிருந்தது.

அவர் முறையாக சட்டத்தரணியொருவரின் உதவியை நாடுவதற்கும், உறவினர்களுடன் பேசுவதற்கும் அனுமதி மறுக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டிய மன்னிப்புச்சபை, அவர் பல்வேறு நோய் நிலைமைகளைக் கொண்டிருப்பதால் முறையான சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளற்ற சிறைச்சாலை சூழலினால் அவருக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து ரஸீக்கின் குடும்பத்தினர் கவலையடைந்துள்ளதாகவும், எனவே அவரை உடனடியாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தது.

இந்த நிலையிலேயே அவர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோஷங்கள் சமூகவலைத்தளங்களில் வலுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# சிங்கராஜா வனப் பகுதியில் சட்டவிரோத வீதி நிர்மாணம்

## உள்ளூர் சூழல் பாதுகாப்பு அமைப்பு யுனெஸ்கோவிடம் முறைப்பாடு

கொழும்பு, ஓக.19

**உலக வரலாற்று சின்னமான சிங்கராஜா வனப்பகுதியில் சட்டவிரோதமாக வீதி நிர்மாணம் மேற் கொள்ளப்பட்டு வருவதாக முறையிடப்பட்டுள்ளது.**

**உள்ளூர் சூழல் பாதுகாப்பு அமைப்பு ஒன்றினால் ஐக்கிய நாடுகளின் யுனெஸ்கோ அமைப்பிடம் இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

சுற்றாடல் மற்றும் இயற்கை கற்கை நெறிக்கான நிலையத்தின் தேசிய இணைப்பாளர் ரவீந்திர காரியவசம் இது தொடர்பில் யுனெஸ்கோவின் உலக வரலாற்று அலுவலகத்துக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் உலக வரலாற்று தொன்மைகொண்ட சிங்கராஜா வனத்தின் லங்காகம பகுதியில் இருந்து தெனியாய வரையிலான பிரதேசத்திலேயே இந்தச் சட்டவிரோத வீதி அமைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

2020 ஒகஸ்ட் 10 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வீதி அமைப்பில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை இராணுவத்தின் பொறியியல் பிரிவினர் சம்பந்தப்பட்டுள்ளனர். ஏற்கனவே 2013இல் ஆரம்பிக்கப்பட்டு யுனெஸ்கோவினால் நிறுத்தப்பட்ட வீதி அமைப்பே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், இந்த வீதிநிர்மாணத்தை நிறுத்தக் கோரி இலங்கையின் ஜனாதிபதி உட்பட்ட அரச அதிகாரிகளிடம் முறையிட்ட போதும் வீதி நிர்மாணம் நிறுத்தப்படவில்லை என சுற்றாடல் மற்றும் இயற்கை கற்கை நெறிக்கான நிலையத்தின் தேசிய இணைப்பாளர் ரவீந்திர காரியவசம் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ரி3)

## சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தன்று

# வடக்கு – கிழக்கில் மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம்

**யாழ்ப்பாணம், ஓக.19**

**சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30ஆம் திகதி மாபெரும் கவனவீர்ப்பு போராட்டங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் உணர்வுபூர்வ மாக 30ஆம் திகதி முன்னெடுக்கப்பட வுள்ளன.**

வடக்கு - கிழக்கில் எதிர்வரும் ஓகஸ்ட் 30ஆம் திகதி காலை 11மணிக்கு இப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதற்கமைய வடக்கில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பமாகும் போராட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கான மகஜர் கையளித்தவுடன் நிறைவுபெறும்.

அதேபோல் கிழக்கில் மட்டக்களப்பு கல்லடியில் ஆரம்பமாகி காந்திபூங்கா வரை சென்று ஐக்கிய நாடுகள் சபைக்கான மகஜர் கையளித்தவுடன் போராட்டம் நிறைவு பெறும். காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி அவர்களது உறவுகள் மழை, வெயில்,பனி பாராது தமது உறவுகள் கிடைப்பார்கள் என போராடி வருகிறார்கள். இதுவரை தமது உறவுகள் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கையில் 72பேர் உயிரிழந்துள்ளார்கள். எதிர்வரும் 30ஆம் திகதி வடக்கு -கிழக்கில் இடம்பெறும் கவனவீர்ப்பு போராட்டத்திற்கு மதகுருமார்கள்,அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், சமூக மட்டபிரதிநிதிகள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுதர அணிதிரளுமாறு வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதேபோன்று இதே தினத்தில் பிரித்தானியா, கனடா போன்ற புலம்பெயர் நாடுகளிலும் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் நீதிக்காக கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-1)

## வாகன விபத்தில் குடும்பஸ்தர் பலி

மாங்கேணி, ஓக.19

மட்டக்களப்பு திருகோணமலை வீதி மாங்கேணி பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில், குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் மாங்கேணியைச் சேர்ந்தவர் என வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

மாங்கேணி பிரப்பையடிமடு பிரதேசத்தில் இருந்து மாங்கேணி கடற்கரையில் மீன் பிடிப்பதற்கு துவிச்சக்கர வண்டியில் சகோதர்கள் இருவரும் பயணித்துக் கொண்டிருந்த வேளையில், மாங்கேணி புல்லாவி பிரதேசத்தில், திருகோணமலையில் இருந்து வந்த காருடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதில் மாங்கேணி பிரப்பையடி மடுவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சபாபதி சிவனேஸ்வரன் (வயது 28) என்பவர் உயிர் இழந்துள்ளதுடன், அவருடன் பயணித்த அதே இடத்தைச் சேர்ந்த சகோதரரான சபாபதி ரவியேந்திரன் (வயது 22) என்பவர் பலத்த காயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவ் விபத்து தொடர்பாக வாகரை பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ரி2-150)

## யுத்தத்தில் பாதிக்கப்பட்ட கடற்படையினருக்கான புதிய திட்டம் அறிமுகம்

கொழும்பு, ஓக.19

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட கடற்படையினருக்கான புதிய திட்டம் ஒன்று இன்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் போது உயிரிழந்த, காயமடைந்த மற்றும் காணாமல் போன கடற்படை வீரர்களின் குடும்பங்கள் அத்துடன் ஓய்வு பெற்ற மற்றும் சேவையிலிருக்கும் கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் மாதாந்தம் மருந்துகள் விநியோகிக்கும் புதிய முறை ஒன்றினை இலங்கை கடற்படை இன்று முதல் அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், கொழும்பு கடற்படை வைத்தியசாலைக்கு வருகை தந்து சிகிச்சை பெற்று வருவோர் அவர்களின் மருந்துப்பொதிகளை தமது வீடுகளில் இருந்தே பெற்றுக்கொள்ளும் வகையில் அவர்களது வீடுகளுக்கு சென்று விநியோகிக்கப்படுகிறது.

கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உளுகேதென்னவின் ஆலோசனைகளுக்கு அமைய குறித்த திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதே வேளை, கடற்படை வைத்தியசாலை நாள்பட்ட நோய்களான நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதய நோய், ஆஸ்துமா, சிறுநீரக நோய், கர்ப்ப நோய் மற்றும் கண், தோல், நரம்பியல் நோய் மற்றும் மன நோயாளிகள் ஆகியோருக்கு மருத்துவ ஆலோசனைகளுக்கு ஏற்ப பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை அனுப்பத் திட்டமிட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி இவ்வாறான திட்டமொன்றை இலங்கை கடற்படையினரால் முன்னேடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி-1)

## உங்களுக்கு ஒரு வீடு நாட்டுக்கு எதிர்காலம்

கொழும்பு, ஓக. 19

உங்களுக்கு ஒரு வீடு  நாட்டுக்கு எதிர்காலம் என்ற திட்டத்தின் கீழ் வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என்று அரசு தெரிவித்துள்ளது. வீடுகள் அற்ற 14 ஆயிரம் பேருக்கு 4 மாதங்களில் வீடுகளை நிர்மாணிக்க எதிர்பார்த்துள்ளதாக, கிராமிய வீடு மற்றும் நிர்மாணிப்பு மற்றும் கட்டடப் பொருள் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் இந்தக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வீடமைப்பு திட்டம் தடைப்பட்டுள்ளது. அதன் நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## சபையில் நான்கு இளசுகள்!

கொழும்பு, ஓக.19

நாடாளுமன்றத்துக்கு இம்முறை தெரிவாகியுள்ள உறுப்பினர்களில் 25 -40 வயதுக்கு இடைப்பட்ட வயதுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 26 ஆக இருக்கின்றது. இதில் நால்வர் 30 வயதுக்கும் குறைந்தவர்களென நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களத் தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 41 -50 வயதுக்கிடைப்பட்ட 68 உறுப்பினர்கள் வாக்களிப்புமூலம் இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். 9 ஆவது நாடாளுமன்றத்துக்கு இளம் வயதுடைய உறுப்பினராக 1994 நவம்பர் 9 ஆம் திகதி பிறந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவாகியுள்ளார்.

நாடாளுமன்ற வரலாற்றில் இதற்கு முன்னர் துமிந்த திஸாநாயக்கவே 25 வயதில் பிரதி அமைச்சர் பதவியை வகித்துள்ளார். 25 - 30 வயதுக்குட்பட்ட 4 உறுப்பினர்களுமே பட்டதாரிகளாவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை 51 - 60 வயதுக்கிடைப்பட்ட 54 பேரும், 61 - 70 வயதுக்கிடைப்பட்ட 37 பேரும் இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவானவர்களில் உள்ளடங்குகின்றனர். 71 - 80 வயதுக்குட்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 9 ஆக இருக்கும் அதேவேளை 81 வயதை தாண்டிய இரு உறுப்பினர்களில் ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,44)

## சிறைக்கைதிக்கு போதைப்பொருள் வழங்க முயற்சித்தவர் கைது


**கேகாலை, ஓக.19**

**கேகாலை சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு ஹெரோய்ன் போதைப்பொருளை வழங்குவதற்கு முயற்சித்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.** 32 வயதுடைய கொட்டியாகும்புர பகுதியில் வசிக்கும் பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்தப் பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து 6 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பெண்ணிடம் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து அவரின் வீட்டிலிருந்து 26 ஆயிரம் ரூபா பணம், மற்றும் 5 கையடக்கத் தொலைபேசிகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளது. (ரி2)

# இரவு 10 மணிவரை கடைகளை திறப்பது சாத்தியமா?



**கொரோனா காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளிலிருந்து படிப்படியாக இயல்பு நிலையை ஏற்படுத்துவதுடன், எதிர்காலத்தில் வெளிநாடுகளில் உள்ளதைப் போன்று இரவுச் சந்தையை நடத்துவதற்காகவே யாழ்.நகரப் பகுதி வர்த்தக நிலையங்களை இரவு 10 மணி வரையில் திறந்து வைக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளது. இது குறித்து யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய உப தலைவருமான இ.ஜெயசேகரன் ''உதயனுக்கு''வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.**

**எதிர்காலத்தில் வெளிநாடுகளைப் போன்று இரவுச் சந்தையை இங்கும் உருவாக்குவதே அரசின் நீண்ட காலத் திட்டம். அதன் ஒரு அங்கமாகவே, இரவு 10 மணி வரையில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வைக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.**

■ சந்திப்பு ஏ.ஏ.

**கே: ள்வி: வடக்கு மாகாணத்தின் முக்கிய நகரங்களிலுள்ள வர்த்தக நிலை யங்களை இரவு 10 மணி வரையில் திறந்து வைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் கூறியுள்ளார். இது சாத்தியமா?**

ப: தில்: கொரோனா இடர் காலத்துக்கு முன்னர் யாழ்ப்பாண நகரில் சில வர்த்தக நிலையங்கள் இரவு 10 மணி வரையில் திறந்திருந்தன. எனவே இரவு 10 மணி வரையில் திறந்திருப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. இது தொடர்பில் ஆராய்வதற்காக ஆளுநர் நடத்திய கூட்டத்தில் நான் பங்கேற்றிருந்தேன்.

கொரோனா காரணமாக கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. அவை படிப்படியாக தளர்த்தப்பட்டு இயல்பு நிலை ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. அதேபோன்றதொரு இயல்பு நிலையை வடக்கு மாகாணத்திலும் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு வர்த்தக நிலையங்களை இரவு 10 மணி வரையில் திறக்கலாம் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

உணவகங்கள், பல்பொருள் விற்பனை நிலையங்கள் உள்ளிட்ட வர்த்தக நிலையங்களை இரவு 10 மணி வரையில் திறந்து வைத்திருக்க முடியும்.

இதேவேளை, ஆளுநரின் கலந்துரையாடலுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையினர் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினரும் அழைக்கப்பட்டிருந்தனர். நகரிலிருந்தான இறுதிப் பேருந்து சேவையின் நேரத்தை பின்நகர்த்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

**கே: இரவு 10 மணி வரையில் வர்த்தக நிலையங்களை திறந்து வைத்திருந்தாலும் மக்கள் நடமாட்டம் இருக்குமா?**

ப: இப்போதே நகர வர்த்தக நிலையங்களுக்கு இரவில் அதிகளவில் மக்கள் வருகின்றார்கள். புடைவை விற்பனை நிலையங்களில் கூட இரவு 7 அல்லது 8 மணி வரையில் மக்கள் கொள்வனவு செய்கின்றார்கள். இரவு 10 மணி வரையில் வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தால் மக்கள் வருவார்கள். போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டால் நிச்சயமாக மக்கள் வருவார்கள்.

இதேவேளை, எதிர்காலத்தில் வெளிநாடுகளைப் போன்று இரவுச் சந்தையை இங்கும் உருவாக்குவதே அரசின் நீண்ட காலத் திட்டம். அதன் ஒரு அங்கமாகவே, இரவு 10 மணி வரையில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வைக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

**கே: வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களின் பணி நேரத்தில் சிக்கல் வராதா?**

ப: வர்த்தக நிலையங்கள் சுழற்சி அடிப்படையில் ஊழியர்களைப் பயன்படுத்தலாம். அல்லது ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்க வேண்டும்.

**கே: கொரோனா இடர் காலத்தின் பின்னர் வர்த்தகர்களின் பொருளாதார நிலைமைகள் எப்படியுள்ளன?**

ப: படிப்படியாக தற்போதுதான் மீண்டெழ ஆரம்பித்திருக்கின்றார்கள்.


**கே: வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு கடந்த காலங்களில் விற்பனை செய்யப்பட்ட பொருள்கள் தற்போதும் கிடைக்கின்றனவா?**

ப: இலங்கை அரசு தற்போது 250 வரையான பொருள்கள் வரையில் இறக்குமதிக்கு தடை விதித்திருக்கின்றது. ஆடம்பரப் பொருள்கள், பான்சிப் பொருள்கள் என்பவைகளும் அதில் உள்ளடங்குகின்றன. இந்தத் தடை காரணமாக சில பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. ஆனாலும் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் அவற்றுப் பதிலாக விற்பனை செய்யப்படுகின்றன.

**கே: மஞ்சளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றதா?**

ப: ஆம். இலங்கை அரசு மஞ்சள் இறக்குமதிக்குத் தடை விதித்துள்ளது. உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக மஞ்சள், உழுந்து உள்ளிட்ட சில பொருள்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதன் காரணமாக உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் சந்தையில் அதிக விலையில் விற்பனையாகின்றன.

இலங்கை அரசு மஞ்சள் உள்ளிட்ட சில பொருள்களின் இறக்குமதிக்கு தடை விதித்திருக்கத் தேவையில்லை என்பதே எனது நிலைப்பாடு. அந்தப் பொருள்களுக்கான உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் அதேவேளையில், இறக்குமதி வரியை அதிகரித்து அவற்றை இறக்குமதி செய்ய அனுமதித்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால், சந்தையில் அந்தப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்காது.



**கே: பலாலியில் அமையப் பெற்றுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக, வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டனவா?**

ப: இல்லை. விமான நிலையம் முழுமையாக மறுசீரமைக்கப்படவில்லை. விரைவில் அது நடைபெறும் என்று நம்புகின்றோம். அதேவேளை, காங்கேசன்துறை துறைமுகமும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக விரைவில் திறக்கப்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

# ஏழைகளை வறுமைச் சுழலுக்குள் தள்ளும் பொறியாக நுண் கடன்!

## மக்களைக் காக்க அரசு தலையிட வேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு வலியுறுத்து

கொழும்பு, ஓக.19



ஏழைகளுக்கு உதவும் நோக்கிலும் வறுமையை ஒழிக்கும் நோக்கிலும் உருவாக்கப்பட்ட நுண் கடன் திட்டம் இன்றளவில் ஏழைகளை வறுமைச்சுழலுக்குள் தள்ளும் பொறியாக மாறியிருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, இத்தகைய நுண் கடன் வழங்கல் நிதி நிறுவனங்களால் ஏற்படுத்தப்படும் நெருக்கடியிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் உடனடியாகத் தலையிட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

உலகளாவிய ரீதியில் பொருளாதார மந்த நிலையொன்று தோன்றியிருப்பதுடன் அதன் எதிர்மறையான விளைவுகளை எம்மால் அவதானிக்க முடிகின்றது. அவ்வாறானதொரு நெருக்கடிநிலையில் எமது நாட்டுக்கு புகழைக் கொண்டுவந்து சேர்த்த கல்விக்கு குறைந்தளவான நிதியை ஒதுக்குவது இயல்பானதாகும். எனினும் நிதி ஒதுக்கீட்டு மாற்றம் கல்வித்துறையைப் பாதித்துவிடாமல் இருப்பதில் கவனம் செலுத்துவது அவசியமாகும். அத்தோடு கொவிட் 19 வைரஸ் பரவலைத் தொடர்ந்து வீழ்ச்சி கண்டிருக்கும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக ஒதுக்கப்படும் நிதி, உண்மையில் அதற்கு பெருமளவு துணைபுரியும் என்பதுடன் சிறிய மற்றும் நடுத்தர வணிகமுகவர்களும் பயனடைவார்கள். கொவிட் 19 இனால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்துக்குப் புத்துயிர் அளிப்பதாக இது அமையும் என்றாலும், தொடர்ந்தும் நிதிச் சமநிலையைப் பேணுவதில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். பொருளாதாரச் செயற்பாடுகளின் மற்றொருபுறம் நுண் கடன் என்பது ஏழைகளுக்கு. அதிகாரமளித்தல் மற்றும் வறுமையை ஒழித்தல் ஆகிய நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டதொன்றாகும். எனினும் தற்போது அது வறுமை என்ற பெரும் நெருக்கடிக்குள் ஏழைகளைத் தள்ளியிருக்கிறது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தற்கொலைச் சம்பவத்தை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடமுடியும். இத்தகைய நெருக்கடியை ஏற்படுத்தும் நிதிநிறுவனங்களின் பிடியிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு அரசாங்கம் தலையிட வேண்டும் - என்றார். (ப)

## 70 வயதைக் கடந்தும் 10 பேர் நாடாளுமன்றுக்கு!

கொழும்பு, ஓக. 19

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற வேட்பாளர்களுள் 10 பேர் 70 வயதைக்கடந்துள்ள அரசியல்வாதிகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுடைய பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்த விவரம் வருமாறு:

இரா. சம்பந்தன் - (வயது-89) தமிழ்த் தேசியக் கூட்மைப்பின் தலைவர், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி - திருகோணமலை மாவட்டம், திஸ்ஸ வித்தாரண - (வயது-85) லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் (ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் நியமனம்), வாசுதேவ நாணயக்கார - (வயது 81) ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - இரத்தினபுரி மாவட்டம், சி.வி. விக்னேஸ்வரன் - வயது 80 தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி - யாழ். மாவட்டம், சமல் ராஜபக்ஷ - (வயது-77) ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - அம்பாந்தோட்டை மாவட்டம், காமினி லொக்குகே - (வயது-77) ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - கொழும்பு மாவட்டம், மஹிந்த ராஜபக் ஷ - (வயது-74) ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - குருநாகலை மாவட்டம், ஜீ.எல். பீரிஸ் - (வயது 74) ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - தேசியப்பட்டியல் .மஹிந்த யாப்பா அபேவர்தன - (வயது 74) ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - மாத்தறை மாவட்டம், லக்ஷ்மன் கிரியெல்ல - (வயது 72) ஐக்கிய மக்கள் சக்தி - கண்டி மாவட்டம் ஆகியோரே 70 வயதைக் கடந்து நாடாளுமன்றுக்குத் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை இலங்கையில் 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஹம்பாந்தோட்டை - பெலிஅத்த தொகுதியில் களமிறங்கி வெற்றிவாகை சூடி நாடாளுமன்றம் தெரிவான மஹிந்த ராஜபக் ஷ இற்றைவரை 50 ஆண்டுகளாக நாடாளுமன்ற அரசியலில் ஈடுபட்டு வருகிறார். (1977 இல் மட்டுமே அவருக்கு தோல்வி ஏற்பட்டிருந்தது. ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலப்பகுதியில் தேர்தலில் போட்டியிடவில்லை.) அத்துடன் வாசுதேவ நாணயக்கார (1970ஆம் ஆண்டும், இரா. சம்பந்தன் 1977 ஆம் ஆண்டு முதலும் நாடாளுமன்ற அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் பட்டியலில் ரணில் விக்கிரமசிங்க இணைந்திருந்தாலும் இம்முறை அவர் வெற்றிபெறவில்லை. எனினும், தொடர்ச்சியாக 42 வருடங்கள் எம்.பியாகச் செயற்பட்ட பெருமை அவருக்குள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

## சபாநாயகராக மஹிந்த யாப்பா?

கொழும்பு, ஓக. 19


புதிய சபாநாயகராக நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பெரும்பாலும் நியமிக்கப்படுவார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் பதவிக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் 4 பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாசீம், லக்ஷமன் கிரியெல்ல, பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் ஹர்ச டி சில்வா ஆகியோரின் பெயர்கள் இந்த பதவிக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன என அந்த கட்சியின் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இதேவேளை, புதிய நாடாளுமன்றத்தின் சபை முதல்வராக வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவும், ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளராக அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவும் நியமிக்கப்படுள்ளனர். நாடாளுமன்ற அமர்வு நாளை ஆரம்பமாகின்ற போது இதற்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன - என்று தெரிவிக்கப்படுறது. (ப)

## கஞ்சா பயிரிடுவதற்கு அனுமதிப் பத்திரம்?

### பெங்கமுவே நாலக தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 19



கஞ்சா பயிர்ச் செய்கைக்கு இலங்கை மிகவும் பொருத்தமான நாடு என்பதால், அதனை அனுமதிப்பத்திரத்துடன் செய்யத் தேவையான வேலைத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என ஆளும் கட்சியுடன் தொடர்புள்ள பிரபல பௌத்த பிக்கு பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய மருத்துவ ஊக்குவிப்பு, கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி, சமூக சுகாதார ராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி மருதானையில் உள்ள அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம், கடமைகளைப் பொறுபேற்றுக்கொண்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நாலக தேரர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கஞ்சா என்பது மருந்து. அதனைப் பயிரிடுவது எமது நாட்டுக்கு மிகவும் சிறந்தது. எமது நாட்டில் விளையும் கஞ்சா மிகவும் உயர்ந்த தரம் கொண்டது. 10 முதல் 15 ஏக்கரில் சட்டவிரோதமாகப் பயிரிடும் கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றி தீயிட்டுக் கொளுத்துகின்றனர். இது மிகப் பெரிய தவறு. எமது நாட்டில் இப்படியான முட்டாள் வேலைகளைச் செய்கின்றனர். அவற்றை அரசுடைமையாக்கி ஆயுர்வேத திணைக்களத்துக்கு வழங்கினால் சிறந்தது. கஞ்சா பயிரிடுவதையும் பதிவு செய்து, அனுமதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டத்தை உருவாக்கினால் சிறப்பாகும் - என்றார். (ப)

## தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு பாடசாலைகளில் இடமளிக்கக் கூடாது

### கிழக்கு கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

அம்பாறை, ஓக. 19

தனிநபர்கள், குழுக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு பாடசாலைகளில் இடமளிக்கப்படக் கூடாது அவ்வாறான நிலைமை பாடசாலைகளைச் சூழுமானால் பாடசாலைகள் முன்னேற்றம் காணமுடியாது. அர்ப்பணிப்பான சேவையாளர்களின் பங்களிப்பே முக்கியமாகும் என்று கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.அப்துல் நிஸாம் தெரிவித்தார்.

நிந்தவூர் அல்அஷ்ரக் தேசிய பாடசாலையில், பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினரால் நிர்மாணிக் கப்படவிருக்கும் மூன்றுமாடி பல்தேவைக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஒரு பாடசாலையின் முன்னேற்றமும், கல்வி அபிவிருத்தியும் அர்ப்பணிப்பான சேவைகள் மூலமே ஏற்படும் ஆனால் பாடசாலைகள் தனிநபர்களினதோ அல்லது குழுக்களினதோ விருப்பு வெறுப்புகளுக்கோ உட்பட்டால் எத்தகைய முன்னேற்றங்களையும் காணமுடியாது. இத்தகைய பாடசாலைகளின் முன்னேற்றம் கருதாத தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஒரு போதும் நாம் இடமளிக்கக்கூடாது. ஒரு பாடசாலைக்கு அத்திபாரமாகத் திகழ்வதும், பெயர் பெறுவதும் அப்பாடசாலையின் கல்வி அபிவிருத்திச் சாதனைகளிலேயே தங்கியுள்ளது. இச்சாதனைகளை நிலைநாட்டுவதற்கு பெற்றோர் ஒத்துழைப்பு மட்டுமன்றி பாடசாலை அபிவிருத்திச் சபைகள், பழைய மாணவர் சங்கங்களின் அர்ப்பணிப்பான ஒத்துழைப்பும், சேவைகளும் முக்கியமாகும். பழைய மாணவர்களின் கொழும்புக் கிளையொன்றும், வெளிநாட்டுக் கிளையொன்றும் அங்குராப்பணம் செய்து விடுவதில் அர்த்தமில்லை. பெயரளவில் மட்டும் இவை இயங்காது பாடசாலைகளுக்கு பயனுள்ள அமைப்புகளாக இவை செயற்பட வேண்டும். தாம் கற்ற, இன்றைய உயர் நிலைக்கு வழிவகுத்த பாடசாலையின் முன்னேற்றம், கல்வி அடைவுமட்ட உயர்வுக்கு வழிவகுக்கும் சேவைகளை அர்ப்பணிப்புடன் நாம் ஆற்ற வேண்டும்-என்றார். (ப-30)

# அடக்கி வாசிக்க வேண்டும் நீதி அமைச்சர் அலி சப்ரி!

## மட்டு. எம்.பி. நஸீர் அஹமட் காட்டம்



கொழும்பு, ஓக. 19

நீதி அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அலி சப்ரி, சகல சமூகங்களாலும் நேசிக்கப்படும் வகையில், பவ்வியமான கருத்துக்களை வெளியிடுவாரென நான் எதிர்பார்க்கின்றேன் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நஸீர் அஹமட் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த ஒரு சமூகத்தின் பிரதிநிதியாகச் செயற்படாது, அரசாங்கத்தின் கொள்கைகளைத் துணிச்சலுடன் முன்னெடுக்கவுள்ளார் என அண்மையில் அலி சப்ரி தெரிவித்துள்ளமை, சிறுபான்மை மக்களை அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது. அமைச்சுப் பொறுப்பையேற்ற சில பொழுதுகளில் இவ்வாறான கருத்தை அமைச்சர் அலி சப்ரி வெளியிட்டமையை மகிழ்ச்சிப்பிரவாதத்தின் வெளிப்பாடாகவே நான் பார்க்கிறேன்.

எந்த விடயத்திலும் உணர்ச்சிவசப்படாமல் கருத்துக்களை வெளியிட வேண்டிய காலத்தேவையில் நாம் உள்ளோம். சில தலைமைகளின் உணர்ச்சிகரப் போக்குகளே, சிறுபான்மைச் சமூகங்களை இன்று பெருந்தேசிய அரசியலிலிருந்து தனிமைப்படுத்தியுள்ளன.

எனவே, பொறுப்புமிக்க அமைச்சைப் பொறுப்பேற்றுள்ள அலி சப்ரி, துள்ளாமலும் துவழாமலும் நடந்துகொள்வதுதான், இந்த அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை சிறுபான்மையினர் மத்தியில் இன்னும் அதிகரிக்கச் செய்யும். அரசமைப்பின் 19ஆவது சரத்தை நீக்கும் விடயத்தில் 'எவருக்கும் அஞ்சப்போதில்லை' என்று அவர் எதற்காகக் கூற வேண்டும். தேவைக்கு அதிகமான நாடாளுமன்ற பலத்தையுடைய அரசு எவருக்கும் அஞ்ச வேண்டியதில்லைதான்.

ஆனால், இதிலுள்ள தர்மங்கள், நியாயங்களைச் சிந்திப்பது ஓர் அரசின் கடமை என்பதை அமைச்சர் என்ற வகையில், அலி சப்ரி மறக்கலாகாது. உங்களை வைத்துத்தான் முஸ்லிம்களின் சில மத விடயங்களை வெல்வதற்கு எமது சமூகம் எதிர்பார்த்துள்ளது. ஆனால், தாங்கள் தெரிவித்து வரும் கருத்துக்கள், இருப்பதையும் இல்லாமல் செய்வதற்கு நீங்கள் உடந்தையாக்கப்படுவீர்களோ! என்றே முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர் - என்றார். (ம)

# மணிவண்ணனுக்கு மீளவும் இடமில்லை

## முன்னணி திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 19

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொறுப்புக்களிலிருந்து நீக்கப்பட்ட மணிவண்ணனுக்கு மீளவும் அந்தப் பொறுப்புக்களை வழங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லையென முன்னணியின் தலைவர்கள் அடியோடு நிராகரித்து விட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர், பேச்சாளர் பொறுப்புக்களிலிருந்து மணிவண்ணனை நீக்குவதென கட்சியின் மத்தியகுழு அண்மையில் தீர்மானித்தது. இதற்கான காரணங்களை குறிப்பிட்டு அண்மையில் மணிவண்ணனுக்கு அறிவிக்கப்பட்டது. பின்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட அறிவித்தலும், நேற்று மணிவண்ணனுக்குக் கிடைத்தது. இந்த நிலையில் சில சமூக செயற்பாட்டாளர்கள், இரு தரப்பிற்குமிடையிலான முரண்பாட்டை களைந்து, மீண்டும் இணைந்து செயற்பட வைக்கும் சமரச முயற்சிகளை மேற்கொண்டனர். இதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அடியோடு நிராகரித்து விட்டார். மணிவண்ணனுக்கு மீள அந்தப் பொறுப்புக்களை வழங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும் தெரிவித்தார். (ம)

# அம்பாறை, திருமலை மக்களுக்கும் சேவை

## வியாழேந்திரன் உறுதிப்பாடு



கொழும்பு, ஓக. 19

மட்டக்களப்புக்கு மாத்திரமின்றி அம்பாறை, திருமலை மக்களுக்காகவும் என் உயிரை அர்ப்பணித்து 24 மணித்தியாலங்களும் சேவைசெய்ய தயாராகவுள்ளேன் என்று இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கிழக்கில் பெரமுனவின் கீழ்போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒரேயொரு வேட்பாளர் நான் மாத்திரமே. இது சாதாரண வெற்றி அல்ல. இவ்வெற்றியின் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் பாடம் புகட்டியுள்ளார்கள். மாற்றுவழி அரசியல் பாதையூடாகத்தான் கிழக்கு மக்களின் அரசியல் இருப்பைப் பாதுகாக்கமுடியும் என்ற தூர நோக்கில் வெற்றிபெற்றுள்ளோம். கிழக்கில் உரிமையுடன் கூடிய அபிவிருத்தியை பெற்றுக்கொடுக்க அமைச்சர்கள் இல்லை. இதற்கான பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனக்கு மட்டக்களப்பு மக்கள் தந்த ஆதரவுக்கு விசுவாசமாக சேவை செய்யவுள்ளேன். முக்கியமாக இரு பொறுப்புக்கள் எனது தலையில் சுமத்தப்பட்டுள்ளன - என்றார். (ம)

# சாத்தியமற்ற அமைச்சரவை

## நளின் 'பளார்'

அரசாங்கம் நடைமுறை சாத்தியமற்ற அமைச்சரவையை நியமித்துள்ளது - என்று தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான நளின் பண்டார.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பற்றிக், கறுவா, மிளகு, மட்பாண்டம், தளபாடம், வெற்றிலை, தென்னை, கித்துல், பனை, பிரம்புகள் என்ற வகையில் அமைச்சர் நியமனங்களை வழங்கியுள்ளது. இவ்வாறான அமைச்சுக்களை நியமிப்பதால் என் பயன் கிடைக்கப் போகின்றது?. இதுவரையிலும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் பின்னடைவிலேயே உள்ளன - என்றார். (ம)

# பாதுகாப்பு, பொருளாதாரம், வெளிவிவகாரம் மூன்றும் கோத்தா தலைமையில் பலப்படும்!

## வெளிவிவகார அமைச்சின் செயலர் உறுதி

கொழும்பு, ஓக. 19

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் முக்கிய மூன்று கொள்கைகளான தேசிய பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி, வெளிநாட்டு உறவு ஆகியவற்றை முன்னிறுத்தி நாட்டிற்கும் குடிமக்களுக்கும் முக்கியத்துவமளித்து, சர்வதேசத்துடனான தொடர்புகளை வலுப்படுத்தி எதிர்வரும் 5-10 வருடங்களுக்குள் நாட்டை முன்னேற்றப்பாதையில் வழிநடத்திச் செல்வதை நோக்காகக்கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதிலும், அவர்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வருவதிலும், வெளிநாடுகளிலிருந்து மருந்துப்பொருள்களை உரிய வேளையில் பெற்றுக்கொள்வதிலும் ஒட்டுமொத்த வெளிவிவகார அமைச்சும் இரவு, பகல் பாராமல் அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. அதனால் தான் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மீண்டும் தினேஷ் குணவர்தனவையே வெளிவிவகார அமைச்சராகத் தெரிவு செய்திருக்கின்றார் என்று கருதுகின்றேன்.

எமது நாடு கடந்த காலங்களில் வெவ்வேறு விதமான வெளிநாட்டுக்கொள்கைகளைப் பின்பற்றி வந்திருக்கிறது. காலஞ்சென்ற லக்ஷமன் கதிர்காமர் போன்ற மிகச்சிறந்த வெளிவிவகார அமைச்சர்களை கடந்த காலத்தில் எமது நாடு கொண்டிருந்தது. எனினும் காலமாற்றங்களுக்கு ஏற்ப வெளிநாட்டுக்கொள்கைகளும் மாற்றமடைந்து வந்திருக்கின்றன. 2019ஆம் ஆண்டு வரையில் சர்வதேச நாடுகளுடன் பின்பற்றப்பட்ட கொள்கைகளையும் நாம் அவதானித்திருக்கின்றோம்.

அவற்றில் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டிய கொள்கைகளை ஆராய்வதுடன், அவற்றை மறுசீரமைப்பதற்கும் வெளிவிவகார அமைச்சு திட்டமிட்டிருக்கிறது. அதே வேளை, 5 வருட பதவிக்காலத்தைக் கொண்டிருக்கின்ற ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் எதிர்வரும் 10-15 வருடங்களைக் கருத்திற்கொண்டே தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் எதிர்வரும் காலத்தில் நாட்டைக் கட்டியெழுப்புவதென்பது மிகவும் கடினமானதாக மாறிவிடும்.

ஆகவே கோத்தாபய ராஜபக்ஷவின் முக்கிய மூன்று கொள்கைகளான தேசிய பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி, வெளிநாட்டு உறவு ஆகியவற்றை முன்னிறுத்தி நாட்டிற்கும் பிரஜைகளுக்கும் முக்கியத்துவமளித்து எதிர்வரும் 5-10 வருடங்களுக்குள் நாட்டை முன்னேற்றப்பாதையில் வழிநடத்திச்செல்வதை நோக்காகக்கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம் - என்றார். (ம)

# தமிழ் மக்களுடைய வாக்குகளை சுயேச்சைகள் சிதறடிக்கக்கூடாது!

## புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் உபதலைவர் சமன் குமார கோரிக்கை

கொழும்பு, ஓக. 19

பல்வேறு சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டு தமிழர்களின் வாக்குகள் சிதறடிக்கப்படும் கலாசாரம் இனியும் வேண்டாம். அனைவரும் ஒரே அணியில் போட்டியிட வேண்டும் என்று தெரிவித்தார் புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் உபதலைவரான சமன் குமார.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் வேட்பாளர்கள் பிரிந்து தனித்தனியாக வாக்கு சேகரிக்கச் சென்றதன் விளைவாக இலங்கை முழுவதும் உள்ள மாவட்டங்களில் தமிழ் பிரதிநிதித்துவம் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. அதனைக் கருத்தில்கொண்டு எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக ஓர் அணியாக இணைய வேண்டும். காலம் கடந்து ஞானம் பிறப்பதைவிட நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலின் முடிவுகளை சிறந்த உதாரணமாகக் கொண்டு செயற்பட வேண்டும்-என்றார். (ம)

நெடுஞ்சாலைகள் மற்றும் உட்கட்டமைப்பு

## 2015இல் நிறுத்தப்பட்ட பல திட்டங்கள் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்!

*இராஜாங்க அமைச்சர் லான்சா நம்பிக்கை*



கொழும்பு, ஓக. 19

2015ஆம் ஆண்டுக்குப் பிறகு நிறுத்தப்பட்ட சாலை மேம்பாட்டுத் திட்டங்களை மீண்டும் தொடங்குவோம். கிராமப்புற சாலைகளின் மேம்பாடு உயர்தரத்துடனும், குறைந்தபட்ச செலவினத்துடனும் செய்யப்படும் என்று தெரிவித்தார் கிராமப்புற சாலைகள் மற்றும் பிற உள்கட்டமைப்பு துறை இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா.

தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அவர் மேலும் தெரிவித்த தாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின்' நோக்கு சிந்தனையின் கொள்கைகளுக்கு ஏற்ப தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பு பெரும் வளர்ச்சியை ஏற்படுத்தும் என்று நம்புகின்றேன். தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தைத் துரிதப்படுத்தும் முகமாக ஒரு லட்சம் கிலோமீற்றர் கட்டுமானத்திற்கான தேசிய மேம்பாட்டுத் திட்டம் விரைவில் நிறைவடையும்.

2015க்குப் பிறகு நிறுத்தப்பட்ட சாலை மேம்பாட்டுத் திட்டங்களை மீண்டும் தொடங்குவோம். மக்களுக்கு வசதியான அதிவேக சாலைகளை செய்து கொடுப்பதற்கான துரித வேலைத்திட்டத்தைத் தொடங்குவோம். கிராமப்புற சாலைகளின் மேம்பாடு உயர்தரத்துடனும் குறைந்தபட்ச செலவினத்துடனும் செய்யப்படும். கிராமப்புற சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் போன்றவற்றில் பாரிய வளர்ச்சியை மேற்கொள்வதன் மூலம் உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்த தேவையான பங்களிப்பை வழங்குவதே எமது நோக்கம் - என்றார். (ம)

# அரசின் பிரதிநிதிகளாக ஊடகங்கள் ஆக வேண்டாம்!

*ஊடகத்துறை அமைச்சின் செயலர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 19

**அரச ஊடகமானாலும் சரி, தனியார் ஊடகமானாலும் சரி, அரசாங்கத்தின் பிரதிநிதியாகவோ அல்லது ஏதேனுமொரு அமைச்சரின் பிரநிதியாகவோ செயற்படத் தேவையில்லை. அந்த ஊடக கலாசாரத்திலிருந்து நாம் முற்றாக வெளிவர வேண்டும் என்று ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் ஜகத்.பி.விஜயவீர தெரிவித்தார்.**

ஊடக அமைச்சில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் அரச மற்றும் தனியார் ஊடகங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்த நிலைமையிலிருந்து மீள்வதற்காக பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஊடகங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். தற்போது ஊடகங்கள் இன்றி எதனையும் செய்துவிட முடியாது என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போதுள்ள ஊடகங்களில் சிறந்த கலாசாரங்களுக்கு பாராட்டு தெரிவிக்க வேண்டிய அதேவேளை, சில தவிர்த்துக் கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றியும் பேசவேண்டியுள்ளது. அரச ஊடகமானாலும் சரி, தனியார் ஊடகமானாலும் சரி, அரசாங்கத்தின் பிரதிநிதியாகவோ அல்லது ஏதேனுமொரு அமைச்சரின் பிரிநிதியாகவோ செயற்படத் தேவையில்லை. அந்த ஊடக கலாசாரத்திலிருந்து நாம் முற்றாக வெளிவர வேண்டும் - என்றார். (ம)

## பெருந்தோட்டத் துறையை மேம்படுத்த அநேக திட்டங்கள்!

*அதன் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*



கொழும்பு, ஓக. 19

பெருந்தோட்டத்துறையை மேம்படுத்துவதற்காக தேசிய மட்டத்தில் அதிகளவான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

பெருந்தோட்டத்துறை அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் வெளிநாட்டு வருமானம் பெருமளவு பெற்றுக் கொள்ளப்படும் ஒரு துறையாக பெருந்தோட்டத்துறை காணப்படுகிறது. இந்த முக்கியத்துவமுடைய துறையில் எமக்கும் பொறுப்புக்களை வழங்கியமைக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுனவின் நிறுவுனர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

பெருந்தோட்டத்துறையை மேம்படுத்துவதற்காக தேசிய மட்டத்தில் அதிகபட்ச வேலைத்திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதோடு, கேகாலை மாவட்டம் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் காணப்படும் பெருந்தோட்டப் பிரதேசங்களில் அவற்றின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படும்.

கம்பனித் தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலைத் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை ஏற்றுமதி மேம்பாடு மற்றும் இறப்பர் உற்பத்தி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம் - என்றார். (ம)

## அங்கஜனுக்கு அமைச்சுப் பதவி; விரைவில் கோத்தாவுடன் பேச்சு

சு.க. பொதுச் செயலாளர் முடிவு

யாழ்ப்பாணம், ஓக. 19

அங்கஜன் இராமநாதனுக்கு வாக்களித்ததன் மூலம் வடக்கு மக்கள் என்ன கூறவருகிறார்கள் என்பது எமக்குப் புரிகிறது. அங்கஜனுக்கு அமைச்சுப் பதவி கொடுக்காதது எமக்கு ஏமாற்றமாக உள்ளது. விரைவில் இது பற்றி ஜனாதிபதியுடன் பேசுவோம் என சிறிலங்கா சுதந்திரக்கட்சி யின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்த தாவது;

வடக்கில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் தெரிவாகியுள்ள அங்கஜன் இராமநாதனுக்கு இராஜாங்க அமைச்சு வழங்கப்படாததால், சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதிருப்தியுடன் இருக்கிறது. எதிர்வரும் வாரங்களில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி அங்கஜன் இராமநாதனுக்கு அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொடுக்க முயற்சிப்போம். அங்கஜன் இராமநாதனைக் கொண்டு வடக்கிலுள்ள பிரச்சினைகளை இனம் கண்டு, அவற்றைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்போம். அண்மைக்கால வரலாற்றில்முதன் முறையாக வடக்குமக்கள்ஒருதேசிய அரசியல் கட்சிக்கு மிகப் பெரிய அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். சுதந்திரக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத்தில் அங்கஜன் இராமநாதன் அமோக வெற்றிபெற்றார். கடந்தகாலங்களில் வடக்குபிரதேச அரசியல் கட்சிகள்மக்களுக்குஅபிவிருத்தியைப் பெற்றுக் கொடுக்காததன் காரணமாகவே வடக்கு மக்கள் இம்முறை தேசிய அரசியல் கட்சியான சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளித்துள்ளனர். எனவே அந்தமக்களின் எதிர்பார்ப்பை நாங்கள்புரிந்துகொள்ள வேண்டும்.எனினும்,புதிய அமைச்சரவையில் அங்கஜனுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை. இது எமக்குப் பெரும் அதிருப்தியாக உள்ளது. மட்டக்களப்பில் வியாழேந்திரனுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. அங்கஜனுக்கும் அமைச்சுப் பதவி வழங்கியிருக்கலாம். எதிர்வரும் வாரங்களில் ஜனாதிபதியுடன் இது பற்றிப் பேசவுள்ளோம். விரைவில் அங்கஜனுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவியொன்றைப் பெற்றுக்கொடுக்க முயற்சிப்போம். சுதந்திரக்கட்சி மீது நம்பிக்கை வைத்த வடக்கு மக்களுக்கு நன்றி கூறுகிறோம். அந்த மக்கள் என்ன கூறவருகிறார்கள் என்பது தெரிகிறது. அந்த விடயங்களில் கவனம் செலுத்துவோம் - என்றார். (ப)

## அங்கொட லொக்கா மீது மேலும் 3 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 19

இந்தியாவில் கொலை செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் திட்டமிட்ட குற்றங்களை புரியும் குழுவின் தலைவரான அங்கொடலொக்கா என அழைக்கப்படும் லசந்த சமிந்த பெரேராவிற்கு எதிராக மேல் மாகாண குற்றத்தடுப்புப் பிரிவுக்கு மேலும் 3 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அங்கொட லொக்காவினால் தமது காணி பலவந்தமாக கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கூறி முல்லேரியா பகுதியைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார். சுமார் 100 பேர்ச்சஸ் காணி பணம் ஏதும் வழங்காது, அங்கொட லொக்காவின் ஆலோசனைக்கு அமைய, அவரது உதவியாளர்களால் இவ்வாறு பலவந்தமாக கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் வீடொன்றும் பலவந்தமாக அங்கொட லொக்காவால் கைப்பற்றப்பட்டுள்ளதாக மற்றொரு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றுக்குமேலதிகமாக மற்றுமொரு முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ம)

## வேலைதேடும் பட்டதாரிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு- கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக வேலை தேடும் பட்டதாரிகள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

ஒன்றிணைந்த வேலை தேடும் பட்டதாரிகள் சங்கத்தினர் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தொழில் நியமனம் வழங்கப்படவுள்ள பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் அரசாங்கத்தால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பெயர் விபரப்பட்டியலில் தமது பெயர்கள் உள்ளடக்கப்படவில்லை யென தெரிவித்தே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# டக்ளஸை நாடும் பட்டதாரிகள்

## வவுனியாவில் சந்திக்க ஏற்பாடு

வவுனியா.ஓக..19

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரச நியமனம் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டு அவர்களது கோரிக்கைகளை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக வடமாகாண பட்டதாரிகள் மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் ம.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார் .

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரச நியமனம் நிராகரிக்கப்பட்ட குறித்த காரணங்களுக்கு அப்பால் அரச நியமனங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அனைத்துப் பட்டதாரிகளும் தார்மீக ரீதியிலான வேண்டுகோள் ஒன்றை கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்குடன் குறித்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது . பல்வேறு தடைகள் தாமதங்களுக்கு மத்தியில் குறித்த கலந்துரையாடல் வடமாகாண பட்டதாரிகள் மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு . திலீபன் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அரச நியமனம் நிராகரிக்கப்பட்ட அனைத்து பட்டதாரிகளையும் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை றோயல் விருந்தினர் விடுதியில் அமைச்சர் தலைமையில் இடம்பெறவுள்ள விஷேட கலந்துரையாடலில் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை 0777425286 என்ற இலக்கத்திற்கு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது - என்றார். (ப-110)

# மாணவர்கள் பயன்படுத்த அனுதிக்கப்படுமா மலசலகூடம்?

கிளிநொச்சி, ஓக. 19

**அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில், சுமார் 15 இலட்சம் ரூபா செலவில், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மலசலகூடங்கள் 2016ஆம் ஆண்டு அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ள போதும், அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலையில் மாணவர்கள் சிரமப்படுகின்றனர் என்று பாடசாலைச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.**



கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்துக்குச் சொந்தமான காணியை பொதுமக்கள் அடாத்தாகப் பிடித்து குடியிருந்த நிலையில் அவர்களுக்கு நகரத்தில் பெறுமதிமிக்க இடத்தில் மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். எனினும் பாடசாலைக் காணியில் வெதுப்பகம் ஒன்றை அமைத்து நடத்தி வருகின்ற ஒருவர் மாத்திரம் காணியை விட்டு மாற்றுக் காணிக்குச் செல்ல மறுத்து தொடர்ந்தும் பாடசாலைக் காணியிலிருந்து தொழில் செய்து வருகின்றார். இதனால் பாடசாலைக் காணியின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்ட குறித்த மலசலக்கூடத்தை மாணவர்களினால் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த மலசல கூடத்தைப் பயன்படுத்துவதற்கு மாணவர்கள் வெதுப்பகத்தைக் கடந்தே செல்ல வேண்டும். ஆனால் அந்த நபர் வேலி அடைத்து தடுத்துள்ளமையால் மாணவர்களால் மலசலக்கூடத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தேசிய அரசியல் கட்சி ஒன்றின் பிரதேச சபை உறுப்பினரே அந்தக் காணியில் தொழில் செய்து வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. எனவே மாணவர்களின் நிலையைக் கருதி அந்த மலசலகூடத்தை மாணவர்களின் பயன்பாட்டுக்கு விடுவித்துத் தருமாறு பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, இந்த விடயம் தொடர்பில் இதுவரை அறிவிக்கப்படவில்லை. எனினும் விடயம் ஆராயப்படும் - என்றார். (ப-214)

# மன்னார் நகர சபையில் ரெலோவின் புதிய உறுப்பினர்

மன்னார், ஓக. 19

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் நகர சபையில் (தமிழீழ விடுதலை இயக்கம்) ரெலோ கட்சி சார்பாக எழுத்தூர் வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று பின்னர் கட்சியில் இருந்து விலகி நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட மனோ ஐங்கரசர்மாவுக்குப் பதிலாக வேறொரு உறுப்பினரை நியமிக்க ரெலோ நடவடிக்கைகளை மேற்கொண்டுள் ளது.

மன்னார் நகர சபைத் தேர்தலில் ரெலோ சார்பாக எழுத்தூர் வட்டாரத்தில் மனோ ஐங்கர சர்மா போட்டியிட்டு வெற்றி பெற்று மன்னார் நகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இந்த நிலையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட அவர் தான் கட்சியில் இருந்து விலகுவதாக எழுத்து மூலம் அறிவித்திருந்தார். அந்த அறிவித்தலை பரிசீலனை செய்த ரெலோ அவர் வகித்த மன்னார் நகர சபை உறுப்பினர் பதவிக்குப் பதிலாக கட்சி உறுப்பினர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மனோ ஐங்கர சர்மாவிற்குப் பதிலாக மன்னார் நகர சபைத் தேர்தலில் போட்டியிட்ட சமாதான நீதவான் என். கணேசலிங்கத்தை நியமிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ரெலோ அறிவித்துள்ளது. (ப-56)

# வலி. தென்மேற்கு பிரதேசத்தில் வீதிகளுக்கு மின்குமிழ்கள்

வலி.தென்மேற்கு, ஓக. 19

வலி. தென்மேற்கு பிரதேசத்திலுள்ள வீதிகளுக்கு மின்குமிழ்கள் பொருத்துவதற்கு முன்வந்த தவிசாளர் அது பற்றிய விவரங்களை அறியத்தருமாறு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டமையைத் தொடர்ந்து தேவையான மின்குமிழ்கள் பொருத்த வேண்டிய இடங்கள் பற்றிய விவரங்களை உறுப்பினர்கள் தவிசாளரிடம் வழங்கி வருகின்றார்கள். இருபத்தெட்டு கிராமிய உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 600 இற்கு மேற்பட்ட வீதிகள் உள்ளன. கடந்தவருடம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்ட நிதி மூலம் அநேகமான வீதிகளுக்கு மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன. பல மாதங்களுக்குப் பின் இவற்றில் பல மின்குமிழ்கள் பழுதடைந்துள்ளமையால் வீதிகள் மீண்டும் இருளில் மூழ்கியுள்ளன. பழுதடைந்த மின்குமிழ்களை மாற்றியமைக்குமாறும் பொருத்தப்படாத வீதிகளுக்கு மின்குமிழ்களைப் பொருத்துமாறும் உறுப்பினர்கள் தவிசாளரைக் கோரினர். தொடர்ந்து மின்குமிழ்கள் பொருத்துவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமையால் இது பற்றிய விவரங்களைத் தெரிவிக்குமாறு தவிசாளர், உறுப்பினர்களைக் கோரியுள்ளனர். இதையடுத்து உறுப்பினர்கள் விவரங்களைத் தெரிவிப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். (ப)



இலங்கை வங்கியின் 81 ஆவது ஆண்டு விழா சாவகச்சேரி கிளையில் அண்மையில் முகாமையாளர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெற்றது. கொரோனாத் தொற்று காரணமாக எளிமையான முறையில் சிவஸ்ரீ வீரபத்திரக் குருக்களின் ஆசியுடன் ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. (ஐ - 9)

# நந்திக்கடலுக்கு பிறந்தது விடிவு!

## முதற்கட்டச் சீரமைப்பு அடுத்த வாரம் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஓக. 19

முல்லைத்தீவு, நந்திக்கடல் சீரமைப்பின் முதற்கட்டப் பணிகளை அடுத்த வாரம் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதுடன் அதற்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விசேட கரிசனையின் அடிப்படையில் கடந்த பல மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த நந்திக்கடல் சீரமைப்பு தொடர்பான முன்னேற்பாடுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இறுதிக் கட்ட கள ஆய்வுப் பணிகள் இடம்பெற்றன. கடற்றொழில் திணைக்களம், மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், நாரா என்னப்படும் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் ஆராய்ச்சி நிறுவனம், வன வளத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளும் கடற்றொழிலாளர் சமூகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட இறுதிக் கட்ட கள ஆய்வுகளின் அடிப்படையில் வட்டுவாகல் பாலத்தை அண்மித்துள்ள நந்திக் கடல் முகத்துவாரப் பகுதியில் குவிந்து கிடக்கின்ற கழிவுகளை உடனடியாக அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், முதற்கட்ட பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. நந்திக்கடல் தூர்வாரப்படாமையால் மீன், இறால் போன்ற கடலுணவுகளின் உற்பத்தி குறைவடைந்துள்ளது. குறித்த நீர்நிலையை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. (ப

# சேதமடைந்த வீதிகளை முதலில் திருத்துங்கள்

சாவ. நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஓக. 19
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படும் வீதிகளை முதலில் சீரமையுங்கள். அதன் பின்னரே நல்ல நிலையில் உள்ள வீதிகளைச் செப்பனிட வேண்டும். இவ்வாறு சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் தெரிவித்தார்.

சாவகச்சேரி, நகரசபை அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சாவகச்சேரி சங்கத்தானை வட்டாரத்தில் உள்ள சப்பச்சிமாவடி வீதி நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாதுள்ளது. இந்த வீதியின் நிலை தொடர்பில் அந்த வட்டாரத்தின் பிரதிநிதிகளான தவிசாளர் மற்றும் உறுப்பினர் வேலாயுதபிள்ளை போன்றோருக்கு நன்கு தெரியும். இந்த வீதியை சீரமைத்து வழங்குமாறு பல தடவைகள் வாய்மூலமும், எழுத்துமூலமாகவும் கோரியுள்ளேன். சிறிய மழை பெய்தாலும் இந்த வீதியைப் பயன்படுத்த முடியாத அளவுக்கு வெள்ளம் காணப்படுகிறது.

வீதி அபிவிருத்தி திட்டங்களின் போது நல்ல நிலையில் சிறு சிறு சேதங்களுடன் காணப்படும் வீதிகளை திருத்துவதற்கு நிதி ஒதுக்குவதற்கு முன்னர் ஒவ்வொரு வட்டாரத்திலும் இன்னமும் சீரமைக்கப்படாமல் காணப்படும் வீதிகளைச் சீரமைக்க முன்னுரிமை வழங்குவதுடன் நல்ல நிலையில் சிறு சிறு சேதங்களுடன் காணப்படும் வீதிகள் தார்க்கலவை பதித்து செப்பனிடப்படல் வேண்டும் என்றார்.

இதற்குப் பதிலளித்த தவிசாளர், குறித்த சப்பச்சிமாவடி வீதி 'ஐ'ரோட் திட்டத்தில் இரண்டாவதாகப் பெயரிடப்பட்டுள்ளது. மிக அவசியமெனக் காணப்படும் பட்டியலில் முதலிடத்தில் உள்ள வீதி சீரமைத்த பின்னர் குறித்த வீதி சீரமைக்கப்படும். தேர்தல் காலத்தில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'ஐ' ரோட் அபிவிருத்தி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-9)

# நகர சபைக்குத் தெரியாமல் கடைகள் கைமாற்றம்!

நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

சாவகச்சேரி ஓக. 19
சாவகச்சேரி நகர சபைக்குச் சொந்தமான கடைகள் சபைக்குத் தெரியாமல் கைமாற்றம் செய்யப்படுகிறது. இவ்வாறான கடைகளை உடனடியாக சபை பொறுப்பேற்று அடுத்த கட்ட நடவடிக்கைக்கு முன்னகர்த்த வேண்டும் என்று சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் சு.நிதிகேசன் தெரிவித்தார்

சாவகச்சேரி நகரசபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாதாந்த அமர்வில் கலந்து கொண்டு தனிநபர் பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது;

சபையால் விதிக்கப்படும் வாடகைக் கட்டணத்தை விட கூடுதலான பணத்துக்கு கடையின் குத்தகையாளர் பெற்றுக்கொள்கின்றனர். சிலர் பெருமளவு பணத்தைப் பெற்றுக்கொண்டு கடை அறையை மாற்றம் செய்துள்ளனர். இந்தச் செயல் சபையுடன் குத்தகையாளர் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு மாறானது. எனவே இவ்வாறான கடைகளை சபை பொறுப்பேற்று அடுத்த கட்ட நடவடிக்கைக்கு முன்நகர்த்த வேண்டும் என்றார்.

இது தொடர்பாக சபை அலுவலர்கள் மூலம், பார்வையிட்டு உறுதிப்படுத்தி மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்து மேல் நடவடிக்கை எடுப்பதாக தவிசாளர் தெரிவித்தார். (ஐ-9)

## துர்க்காதேவியின் ஆலயத் திருவிழாவுக்கு

# கலாசார உடையின்றி வருவோர் யாராயினும் வெளியேற்றப்படுவர்

## சுகாதாரத் துறையினர் அறிவிப்பு

**தெல்லிப்பழை, ஓக. 19**
**தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் போது கலாசார உடையுடன் வருகைதராதோர் ஆலயத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் கொரோனாத் தொற்றுக் காரணமாக ஆலயத்துக்கு வரும் அடியார்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் கலாசார உடையுடன் வருவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

திருவிழாக் காலத்தில் ஆலயத்தில் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும், முகம் கவசம் அணியவேண்டும். சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆலயத்தில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு ஆலயத்தில் காவடி, தூக்குக்காவடி, சப்பூரச்சட்டி, அங்கப் பிரதட்சனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. ஆலய வளாகத்தில் வியாபார நிலையங்களை அமைப்பது, அன்னதானம், தண்ணீர்ப் பந்தல்கள் அமைப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சீருடைக்கான வவுச்சர்களை ஏற்க வர்த்தகர்கள் மறுப்பு!

சாவகச்சேரி. ஓக. 19
இவ்வருடம் தரம் ஒன்று வகுப்பில் இணைந்த மாணவர்களுக்கு பாடசாலைகளில் வழங்கப்பட்ட சீருடைக்கான வவுச்சர்கள் வங்கியால் ஏற்றுக் கொள்ளப்படாததால் பணத்தைச் செலுத்தி வவுச்சரை பெற்றுக் கொள்ளுமாறு வர்த்தகர்கள் கோருகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தரம் ஒன்றில் கடந்த ஜனவரி மாதம் இணைந்த மாணவர்களுக்கான சீருடைக்குரிய வவுச்சர்கள், கொரோனாத் தொற்றுக் காரணமாக பாடசாலைகள் பூட்டப்பட்டு கடந்த மாதம் திறக்கப்பட்ட போது அதிபர்களால் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டன. வவுச்சர்கள் ஜூலை 31 ஆம் திகதி வரை செல்லுபடியாகுமென குறிப்பிடப்பட்டுள்ளது. பெற்றோர் இந்த வவுச்சர்களை வர்த்தக நிலையங்களில் கையளித்து சீருடைத் துணிகள் கொள்வனவு செய்துள்ளனர். குறித்த வவுச்சர்களை வங்கி ஏற்க மறுத்துள்ளதால் துணிக்குரிய பணத்தைச் செலுத்தி வவுச்சர்களை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு வர்த்தகர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வங்கிக் கிளையினருடன் தொடர்பு கொண்டபோது தமக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஜூலை 31 ஆம் திகதியுடன் பாடசாலைச் சீருடை தொடர்பான கணக்கை முடிவுறுத்தி அனுப்பி வைக்குமாறு குறிப்பிட்டுள்ளனர். அதனால் தற்போது சமர்ப்பிக்கப்படும் வவுச்சர்களுக்கு வழங்க நிதி இல்லை. தற்போது புதிய கல்வி அமைச்சர். நியமிக்கப்பட்டுள்ளதால் விரைவில் வவுச்சர்களுக்குரிய கொடுப்பனவுகள் வங்கிக்கு அனுப்பி வைத்ததும் வர்த்தகர்களிடமுள்ள வவுச்சர்களைப் பெற்றுக் கொள்வோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# சுயதொழில் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

வவுனியா, ஓக. 19
பனையோலையைப் பயன்படுத்தி அலங்காரப் பொருள்கள் தயாரிப்பதற்கான புதிய பயிற்சி வகுப்புகள் நேற்று ஆரம்பமாகின.

வவுனியா நகர சபை உறுப்பினரும் ஆசிரியருமான சுந்தரலிங்கம் காண்டீபனின் ஒழுங்கமைப்பில், வவுனியா திருநாவற்குளம் ஆற்றலரசி குழும அலுவலகத்தில் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தப் பயிற்சி வகுப்புக்கள் சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதை நோக்கமாக் கொண்டு 6 மாத காலப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா நகர சபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் மோகன், சிறப்பு விருந்தினர்களாக. கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் சந்திரேஸ்வரன், ஆற்றலரசி குழும தலைவர் திருமதி க.லூசியா மற்றும் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-110)



# இணக்க சபை அமர்வுகள்

உடுவில்,ஓக.19
உடுவில், தெல்லிப்பழை ஆகிய இரு பிரிவுகளுக்குமான இணக்க சபை அமர்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என இரு சபைகளின் தவிசாளர்களும் தெரிவித்துள்ளனர்.

உடுவில் பிரதேச இணக்க சபை அமர்வுகள் மருதனார் மடம் யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியிலும், தெல்லிப்பழை பிரதேச இணக்க சபை அமர்வுகள் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் வழமைபோல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-39)

# பெருந்திருவிழா

வேலணை, ஓக.19
வேலணை வடக்கு இலந்தைவனப்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 9 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஜனாதிபதி வசம் இரு அமைச்சுக்கள்

## உத்தரவிடக் கோரி மனுத் தாக்கல்

**கொழும்பு, ஓக.19**
**பாதுகாப்பு மற்றும் புத்தசாசன அமைச்சுக்களை ஜனாதிபதி தன்வசம் வைத்திருக்க வேண்டும் என உத்தரவிடக் கோரி, அடிப்படை உரிமை மனு, வழக்கறிஞர் அருண லக்சிறி என்பவரால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக, ஜனாதிபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.
அரசமைப்பின் 9, 30 மற்றும் 105 (4) ஆகிய பிரிவுகளின் அடிப்படையில், இலங்கையில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது என்று மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதன் அடிப்படையில், புத்தசாசன அமைச்சை வேறொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு, ஜனாதிபதியால் வழங்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, ஜனாதிபதி தற்போது பாதுகாப்பு அமைச்சை மாத்திரம் தன்வசம் வைத்துக் கொண்டு, புத்தசாசன அமைச்சுப் பதவிகளை வகிக்காதிருப்பதன் மூலம், அரசமைப்பின் 9, 10 மற்றும் 12 (1) ஆகிய பிரிவுகள் மீறப்பட்டுள்ளன என்றும் மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

## பொருளாதார, பாதுகாப்புக்களில் ஒத்துழைக்க அமெரிக்கா தயார்

### பிரதமர் மஹிந்தவிடம் கூறினார் அமெரிக்கத் தூதுவர்



கொழும்பு, ஓக. 19
பொருளாதார, வணிக, ஆளுமை மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல துறைகளில் இலங்கையுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் அமெரிக்கா ஆர்வமாக உள்ளதாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதர் அலினா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.
பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ வுடன் நேற்று முன்தினம் மாலை நடத்திய சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
முன்னதாக இலங்கையின் பொதுத்தேர்தல் சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான முறையில் நடத்தப்பட்டமை குறித்து அமெரிக்கத் தூதுவர் பாராட்டுக்களைத் தெரிவித்தார். தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா எதிர்பார்ப்பதாகவும் தூதுவர் கூறியுள்ளார்.
இதன்போது இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளைத் தயார்படுத்துவதற்காக நாடு முழுவதும் தொழிற்பயிற்சி மையங்களை நிறுவு வதற்கு இலங்கைக்கு அமெரிக்கா உதவி வழங்க முடியும் என்று பிரதமர் மஹிந்த யோசனை வழங்கியுள்ளார். இதற்குப் பல வாய்ப்புக்கள் உள்ளதாக அமெரிக்கத் தூதுவர் எலைய்னா டெப்லிட்ஸ் குறிப்பிட்டார் என இலங்கை அரச தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.
இதேவேளை இலங்கைக்கு புதிய முதலீடு களைக் கொண்டுவருதல், ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் ஆளுமை தொடர்பான திட்டங்களுக்கு ஆதரவு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு, மக்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல், நாடு கடந்த குற்றங்களை நிவர்த்தி செய்தல் ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட கவனம் செலுத்துவது, பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பு ஆகியவை தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## சுகாதார விதிமுறைகளுடன் இன்று அமைச்சரவைக் கூட்டம்

கொழும்பு, ஓக. 19
புதிய அரசாங்கத்தின் அமைச்சரவைக்கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. அமைச்சரவைக் கூட்டத்தை தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு முக்கியத்துவம் வழங்கி நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அமைச்சர்களுக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணுதல், முகக்கவசம் அணிதல், கைகளைக் கழுவுதல் என்பன கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மெரி அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. புதிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் கடந்த 12ஆம் திகதி கண்டி தலதா மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றனர். 39 ராஜாங்க அமைச்சர்களும் பதவியேற்றனர். இம்முறை அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு இராஜாங்க அமைச்சர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சர் ஒருவர் அமைச்சரவைக்குப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்யும் போது அவர் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும் எனக் கூறப்படுகிறது. (ப)

## 32 லீற்றர் கோடா;

### சந்தேகநபருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, ஓக. 19
கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் 32 லீற்றர் கோடா வைத்திருந்த சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.
சரசாலைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கடந்த சனிக்கிழமை அங்கு சென்ற பொலிஸார் ஒருவரைக் கைது செய்தனர்.
சந்தேகநபரால் இரு இடங்களில் பதுக்கி வைக்கப்பட்டதாக தெரிவித்து 32 லீற்றர்கோடாவைக் கைப்பற்றினர்.
சந்தேகநபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.
வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-9)

## கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டுச் செயற்பட்டீர்கள்

### புத்தளம் மக்களை

### பாராட்டுகின்றார் ரிஷாத் பாராட்டு



புத்தளம், ஓக. 19
கட்சி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால், புத்தளம் வாழ் மக்கள் ஒன்றுபட்டதன் காரணமாகவே, மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாம் இழந்த பிரதிநிதித்துவத்தை பெற முடிந்தது. இனிவரும் காலங்களிலும் இவ்வாறு ஒற்றுமையுடன் செயற்பட்டால் இதைவிட பெரிய வெற்றிகளைப் பெற முடியும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.
புத்தளம், வேப்பமடுவில் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நடந்து முடிந்த பொதுத் தேர்தல், புத்தளம் சிறுபான்மை மக்களுக்கு நல்லதொரு செய்தியைக் கூறுகின்றது. பெரும்பான்மையின கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன ஆகியவற்றின் பின்னால், நாம் பிரிந்து நின்று அரசியல் செய்ததனாலேயே, முப்பது வருடங்களுக்கு மேலாக பிரதிநிதித்துவத்தை இழந்து தவித்தோம்.
சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் பின்னடைவு அடைந்தோம். பல்வேறு அநியாயங்கள் எமது சமூகத்துக்கு இழைக்கப்பட்டன. நமக்கென்று நாடாளுமன்றப் பிரதிநிதி ஒருவர் இல்லாததனாலேயே இந்த நிலை ஏற்பட்டது. எனவே, இதனை அடைய வேண்டுமென்ற முயற்சியில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நீண்ட காலமாக ஈடுபட்டது.
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சகோதரர் ரவூப் ஹக்கீமும் இதற்கு உடன்பாடு கண்டார். எல்லோரும் ஒன்று சேர்ந்து கூட்டமைப்பை உருவாக்கியதனாலேயே, நாம் இந்த வெற்றியைப் பெறமுடிந்தது. ரணில், சஜித், மஹிந்த ஆகிய தலைவர்கள், இன்று புத்தளம் தொகுதியில் தமது பார்வையை செலுத்தும் நிலையை உருவாக்கியது நமது ஒற்றுமையே-என்றார். (ம)

## இனவாதக் கட்சிகளால் மக்களுக்கு விடிவில்லை

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 19
இனவாதக் கட்சிகளால் நாட்டுக்கு நன்மை கிடைக்காது. அந்தக் கட்சிகளுக்கே நன்மை கிடைக்கும். தமிழ் மக்கள் இனவாதக் கட்சிகளால் எதைக் கண்டார்கள்? 60 ஆயிரம் இளைஞர்கள் இறந்தார்கள். அதனால் எதைக் கண்டார்கள் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.
கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
இனவாதக் கட்சிகளால் இந்த நாட்டுக்கு எந்த நன்மையும் கிடைக்காது. அந்தக் கட்சிகளுக்கு மட்டுமே நன்மை கிடைக்கும். மக்களுக்கு என்ன கிடைக்கும்? தமிழ் மக்கள் மத்தியில் 60 வருடங்களாக உருவான இனவாதக் கட்சிகளால் என்ன நடந்தது? 60 ஆயிரம் வரையான இளைஞர்கள் உயிரிழந்தார்கள். இதனால் என்ன பலன் கிடைத்தது? பல புத்திஜீவிகள் கொல்லப்பட்டனர். 3 இலட்சத்திற்கும் அதிகமான படித்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறினர் - என்றார். (ப)

சர்வதேச நாடுகளில் கொரோனா இரண்டாம் அலையானதால்

# கட்டுநாயக்க விமான நிலையத்தை இப்போது திறப்பதற்கு முடிவில்லை

## சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 19**
**கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மீள் திறக்கும் திகதியை தற்போதைய நிலையில் உறுதியாகக் குறிப்பிடமுடியாது. சுகாதார மற்றும் உலக சுகாதாரத் தரப்பினரது பரிந்துரைகள் முழுமையாகப் பின்பற்றப்பட்டே விமான நிலையம் மீள் திறக்கப்படும். கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்திய சர்வதேச நாடுகளில், வைரஸ் தொற்று இரண்டாம் அலையாக தாக்கம் செலுத்தியுள்ளமை கவனத்திற்குரியது என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;
சுற்றுலா சேவை கைத்தொழில் இலங்கையின் தேசிய பொருளாதாரத்தில் நேரடியாகப் பங்களிப்புச் செலுத்துகிறது. பூகோள மட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கொவிட் 19 வைரஸ் தாக்கத்தால் சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் நாட்டுக்கு வருவதற்கும், அவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவதற்கும் சுகாதாரத் தரப்பினது ஆலோசனைகளுக்கு அமைய பல செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.
காலவரையறையின்றி மூடப்பட்ட கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை இம்மாதம் திறப்பதற்கு எதிர்பார்த்திருந்தோம். இவ்விடயம் தொடர்பில் போக்குவரத்து அமைச்சிலும், சிவில் விமான சேவைகள் பிரிவிலும் பேச்சுக்களை முன்னெடுத்திருந்தோம். கொவிட் 19 வைரஸ் பரவல் சமூக தொற்றாகப் பரவலடையும் அபாயகரமான கட்டத்தை நாம் கடந்துள்ளோம். ஆனால் சர்வதேச நாடுகள் ஏதும் இதுவரையில் கொவிட் 19 வைரஸ் தாக்கத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தவில்லை.
வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தியதாகக் குறிப்பிட்ட நாடுகளில் வைரஸ் தொற்று இரண்டாம் அலையாகத் தாக்கம் செலுத்தியுள்ளது. இவ்வாறான நிலையில் விமான நிலையத்தை எப்போது திறப்பது என உறுதியாகக் குறிப்பிட முடியாது-என்றார். (ப)

## தலைமறைவாகிய தேரரை கைது செய்ய பொலிஸ் குழு

கொழும்பு, ஓக. 19
அபேஜன பல வேகய கட்சியின் பொதுச்செயலாளர் வேதினிகம விமல திஸ்ஸ தேரரைக் கைது செய்ய கண்டிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவித்த மத்திய மாகாண மூத்த டி.ஐ.ஜி சஞ்சீவ தர்மரத்ன, குறித்த தேரரைக் கைது செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.
வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கோயில் கட்டடத்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெல்லாவ விகாரையின் தலைமைத் தேரர் கலன்குட்டிய ராகுல தேரர் கண்டிப் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டுக்கு அமைய வேதினிகம விமலதிஸ்ஸ தேரரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த முறைப்பாட்டின் அடிப்படையில், கோயில் கட்டடத்தின் வரலாற்று மதிப்பு குறித்து கண்டிப் பொலிஸார், தொல்பொருள் ஆணையர் பேராசிரியர் செனரத் திஸாநாயக்காவிடம் முழுமையான அறிக்கையைக் கோரியுள்ளனர். இதன்படி, வெல்லாவ கோயில் வரலாற்று மதிப்பைக் கொண்டுள்ளது என்றும், அங்கீகரிக்கப்படாத கட்டுமானத்தின் மூலம் தொல்பொருள் கட்டளைச் சட்டத்தில் உள்ள விதிகள் மீறப்பட்டுள்ளது எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே, தலைமறைவாக இருக்கும் தேரரைக் கைது செய்ய குழு நியமிக்கப்பட்டுள்ளது என மத்திய மாகாண மூத்த டி.ஐ.ஜி சஞ்சீவ தர்மரத்ன தெரிவித்துள்ளார். (ப)

## ஊடகங்களுக்குப் பதிலளிக்க விரும்பாத ரவிநாத ஆரியசிங்க

கொழும்பு, ஓக. 19
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ தலைமையிலான புதிய அரசாங்கத்தில் இதுவரை காலமும் வெளிவிவகார செயலாளராகப் பதவிவகித்த, ரவிநாத ஆரியசிங்க அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, அவ்வெற்றிடத்திற்கு அட்மிரல் ஜயநாத் கொலம்பகே நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில், தனது அடுத்தகட்ட செயற்பாடுகள் குறித்து ஊடகங்களுக்குப் பதிலளிப்பதை தவிர்த்துள்ளார்.
கடந்த 2019 நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்ட கோத்தாபய ராஜபக்கவினால் அரச உயர்மட்டப் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும், மைத்திரியின் ஆட்சியில் வெளிவிவகார செயலாளராக நியமிக்கப்பட்ட ரவிநாத ஆரியசிங்க மீண்டும் வெளிவிவகார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.
இந்நிலையில் அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றியைப் பெற்று நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டும் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. இதனைத்தொடர்ந்து புதிய அமைச்சரவை நியமனம் இடம்பெற்றிருப்பதுடன், அமைச்சுக்களுக்கான செயலாளர்களும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ வினால் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதன்படி வெளிவிவகாரச் செயலாளராகக் கடையாற்றிவந்த வெளிநாட்டு உறவுகளில் நீண்டகால அனுபவம்கொண்ட மூத்த இராஜதந்திரியான ரவிநாத ஆரியசிங்க நீக்கப்பட்டு, அப்பதவிக்கு ஓய்வுபெற்ற முன்னாள் கடற்படை அதிகாரி யொருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். எனினும் ரவிநாத ஆரியசிங்க அவருடைய அனுபவத்திற்கும் தகுதிக்கும் ஏற்றவாறான உயர் இராஜதந்திரப்பதவியில் நியமிக்கப்படுவாரா என்பது குறித்து இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை. இது குறித்து அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டறிவதற்காக அவரைத் தொடர்புகொண்ட போதிலும், இதுபற்றி ஊடகங்களிடம் எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை என்றும் அவ்வாறு கூறுமளவிற்கு எதுவுமில்லை என்றும் அவர் பதிலளித்தார். (ப)

## பொருளாதாரப் பொறிமுறைக்காகவே இராஜாங்க அமைச்சுக்கள் உள்ளீர்ப்பு

ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 19
பொருளாதாரத்தின் உரிமையை மக்கள் அடைந்துகொள்ளும் மக்கள் மையப் பொருளாதாரப் பொறிமுறை ஒன்றுக்காக இம்முறை இராஜாங்க அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். இராஜாங்க அமைச்சுக்களின் விடயதானங்கள் குறித்து மீளாய்வை ஆரம்பிக்கும் வகையில் ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இதனைத் தெரிவித்த ஜனாதிபதி பற்றிக், கைத்தறி, ஆடைகள் மற்றும் உள்நாட்டு ஆடைக் கைத்தொழிலுக்காக இராஜாங்க அமைச்சொன்றை உருவாக்குவதற்கான காரணங்களையும் சுட்டிக்காட்டினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொவிட் 19 காரணமாக பாரிய சிக்கல்களுக்கு ஆளாகியுள்ள ஏனைய நாடுகள் இயல்பு நிலைக்குத் திரும்பும் வரை உள்நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்தாது முன்னோக்கிச் செல்ல முடியாது. ஆடைக் கைத்தொழில் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 43 வீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இதன் மூலம் ஏற்றுமதி வருமானத்துக்கு வருடாந்தம் 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கப்பெறுகின்றது. தொழில் வழங்கும்போதும் மற்றும் பிரதேச அபிவிருத்தியின் போதும் ஆடைக் கைத்தொழில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றன. அதனை வலுப்படுத்தும் முகமாகப் பற்றிக் மற்றும் கைத்தறி உட்பட உள்நாட்டு ஆடை உற்பத்தியை மேம்படுத்துவது அரசின் பிரதான நோக்கமாகும். பற்றிக் மற்றும் கைத்தறி கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்குள் ஆடை உற்பத்தியாளர்களுக்கு ஒரு ஸ்திரமான நிலையை ஏற்படுத்த முடியும் - என்றார் (ப)

## எதிர்பாராத அளவுக்கு உடைகிறது ஐ.தே.க!

கொழும்பு, ஓக. 19
நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 22 மாவட்டங்களில் போட்டியிட்ட 262 வேட்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள், கட்சியில் இருந்து விலகத் தயாராகி வருகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் தொடர்ந்தும் நீடிப்பார் என்ற தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.
கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி முழு நாட்டிலும் 2 லட்சத்து 49 ஆயிரத்து 439 வாக்குகளையே பெற்று ஐந்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டு வரலாற்றில் படுதோல்வியைச் சந்தித்தது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர்கள், இந்த தோல்விக்கான நேரடிக் காரணம் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை மற்றும் அவரது தன்னிச்சையான தீர்மானங்கள் எனவும் கூறியுள்ளனர்.
இந்த நிலையில் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தேர்தலைச் சந்தித்தால், தற்போது கிடைத்துள்ள இரண்டரை லட்சம் வாக்குகள், ஒன்றரை லட்சமாகக் குறையும். இவ்வாறான மிக மோசமான நிலைமையை எதிர்நோக்க தாம் தயாரில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது. (ம)

## வேலையாள்கள் தேவை

தச்சுத்தொழிலில் அனுபவம் உள்ள வேலையாள்கள் தேவை. மரத்தளபாட உற்பத்தி.

K.K.S.வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
077 713 0872

## அறிவித்தல் இனிய வாழ்வு இல்லம் பணிவெற்றிடத்துக்கான விண்ணப்பம் கோரல்

**இனிய வாழ்வு இல்லத்தில் கீழ்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**பணிநிலை :** - 1 கேட்டல். பார்வை குறைபாடுடைய பிள்ளைகளை பராமரித்தல் (ஆண். பெண்)

**பணிநிலை :** - 2 சமையற் பணியாளர் (பெண்)

**தகைமைகள்:**

1) 40 வயது தொடக்கம் 60 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.
2) உடல்நலம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்.
3) ஒழுக்க சீலராக இருக்க வேண்டும்.
4) இல்லத்தில் தங்கியிருந்து பணி செய்தல் வேண்டும்
5) சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
6) கல்வித்தரம் 8 வரையில் இருந்தால் நன்று

குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விபரங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 31.08.2020 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு இல: 077 775 2566/ 021 206 1949 / 077 590 3184

**முகவரி :** தலைவர் / செயலாளர்
இனிய வாழ்வு இல்லம், தேவிபுரம்
"அ" பகுதி புதுக்குடியிருப்பு

முகாமையாளர்.

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-09 கனகரட்ணம் வீதி 1ம் ஒழுங்கை வரிமதிப்பீட்டு இலக்கம் 37/8 என்னும் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கணபதிப்பிள்ளை கோவிந்தப்பிள்ளை என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 01.05.2005ம் ஆண்டு 8502ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் ஆட்சியுரிமை சட்டத்தின் 3ம் பிரிவுக்கு அமைவாக தான் ஆட்சியுரிமை கொண்டுள்ளதாக யாழ்ப்பாணம் அரியாலை கனகரட்ணம் வீதி 45/1 இலக்க முகவரியைக்கொண்ட நல்லையா சுப்பையா வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் அரியாலை சாஸ்திரியார் ஒழுங்கை 45/7 என்னும் இடத்தைச் சேர்ந்த நல்லையா சுப்பையா பிரசித்த நொத்தாரிசு மேனகா கேசவன் முகதாவில் 08.07.2015ம் திகதிய 725ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் தனது சீவிய உரித்துக்கு அமைவாக சுப்பையா மகள் உதயகுமாரிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

**ஆதனடாப்பு:**-வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு தற்போது அரியாலை இறை செம்மணியத்தியன் புலமும் செம்மணித்தியன் வளவு நில.பர 02 இரண்டு குளி 8.40 எட்டுத்தசம் நான்கும் வீடும் கிணறும் பயிர் வகைகளும். இது 13.06.2004ந் திகதி உத்தரவு பெற்ற உலாந்தர் திரு.கே.கனகசபை அவர்களால் அளந்து வரையப்பட்ட 1656ம் இலக்க படத்தில் காட்டிய 1ம் இலக்கத்துண்டு. எல்லைகள்.

**கிழக்கு :-** கார்த்திகேசுவின் ஆதனம்.
**வடக்கு :-** குழந்தையர் பெண் யோகம்மாவின் ஆதனமும் ஒழுங்கையும்.
**மேற்கு :-** ஒழுங்கை.
**தெற்கு :-** ஆறுமுகம் தர்மலிங்கத்திற்கும் கார்த்திகேசுவுக்குமுரிய ஆதனம். இதடங்கலும்

தற்போது சுப்பையா மகள் உதயகுமாரி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சுப்பையா மகள் உதயகுமாரி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இம்மனுவல் ஆனோல்ட்**
**முதல்வர்**
**மாநகரசபை**

## 21 ஆவது நினைவலைகள்



செல்வன்
**குணசிங்கம் ஞானேந்திரன்**
(குட்டி, கண்ணா)
(கோபிகா ஆடையக உரிமையாளர்)

மகிழ்வில் 07.01.1977
துன்பத்தில் 10.09.1999


கண்ணான கண்ணா!
கண் முன்னே வருவாயோ! என ஏங்கி
கண்கள் நனைகின்றன
கண்ணுக்குள் உன் நினைவுகள் நிழலாடுகின்றன
கண்ணீரில் எத்தனை வருடங்கள் சென்றாலும்
கண்ணா! உன் நினைவுகள்
எமது உயிர் உள்ளவரை நீங்காதடா.....

40/6, புகையிரத வீதி,
கிழக்கு ஒழுங்கை.
கந்தர்மடம்.

உன் நினைவில் வாழும்
குடும்பத்தினர்
(கோபிகா ஆடைகம், கந்தர்மடம்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 . 06 . 1947



மறைவு 31 . 08 . 2019

### அமரர் செல்லையா கண்ணுத்துரை

திதி:-பிரதமை (19.08.2020 - புதன்கிழமை)

பேரன் பேர்த்தியில் பாசம் இருந்தும்
ஊரின் வாசம் (வாசகம்) உமை அழைத்தது
நாம் வேறு வேறு நாட்டில் வாழ்ந்ததே
வேதனை என்றிருக்க,
நீங்களோ வேறு லோகம் போனீங்களே!
இது என்ன சோதனை.....

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

ஆண்டு ஒன்று ஆகியும் ஆறாமனங்களுடன்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

**2007 Hero Honda Spelender/ 2002 Honsan 125** (முழுதாக திருத்தி வடிவமைக்கப்பட்ட)/ **Honda CD185** இம் மூன்று மோட்டார் சைக்கிள்களும் விற்பனைக்கு உண்டு.

**077 898 9691**
**(யாழ்ப்பாணம்/ கச்சேரி)**

## ஆங்கில ஆசிரியர் தேவை

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் மாதிரி முன்பள்ளி நிறுவனத்திற்கு **ஆங்கில ஆசிரியர் (பெண்)** தேவை. அனுபவம், தகைமை பரிசீலிக்கப்படும்.

**தொடர்பு:-**
**077 386 7458, 021 221 6933**

## வேலையாள் தேவை

ஆங்கில அறிவுடைய ஆண்/ பெண் வேலையாள்கள் தேவை.
அண்மையில் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**சிலோனா ரேடர்ஸ்**
**தொடர்பு:- 077 778 8388**
**126, மானிப்பாய் வீதி, உடுவில்.**

## உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு
**advt@uthayan.com**
**021 493 1111**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

உ
சிவமயம்

## சபிண்டீகரண அழைப்பு

கடந்த 30.06.2020 செவ்வாய்க்கிழமை
ஏகாதசித் திதியில் சிவபதமடைந்த
எமது சகோதரி

அமரர்
**Dr.வினோதினி சண்முகலிங்கம்**

அவர்களின் சபிண்டீகரண கிரியை இன்று (19.08.2020) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"குற்றாலம்"
43, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 15 . 05 . 1948



இறப்பு 20 . 07 . 2020

### அமரர் திருமதி குணசிங்கம் தவமணி

கடந்த 20.07.2020 அன்று இறைபதமடைந்த அமரர் திருமதி குணசிங்கம் தவமணி அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.08.2020) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் அனைவரும் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடரந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

துரை வீதி, இணுவில்.

குடும்பத்தினர்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 30 . 06 . 1943



இறப்பு 06 . 08 . 2020

கடந்த (06.08.2020) வியாழக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர் திருமதி

## சின்னராஜா இராஜேஸ்வரி

**(தவில் மாமேதை N.R. சின்னராஜாவின் அன்பு மனைவி)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (20.08.2020) வியாழக்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (21.08.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு உங்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.**

**கோவில் வாசல்,**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**குடும்பத்தினர்**
**077 628 0254, 077 519 4510**

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 03 . 1921



இறப்பு 18 . 08 . 2020

## செல்லையா முருகுப்பிள்ளை

முல்லைத்தீவு முள்ளியவளை 2ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா முருகுப்பிள்ளை நேற்று (18.08.2020) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்லம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், வினாசித்தம்பி, கந்தையா மற்றும் கனகசபாபதி, இராசம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, குலசிங்கம் மற்றும் பாலசிங்கம் (வித்தியானந்தக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் ஓய்வு பெற்ற வவுனியா தெற்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர்), தவமணிதேவி, கந்தசாமி (இத்தாலி) சிவசுப்பிரமணியம் (**Consultan J.M.O** தேசிய வைத்தியசாலை - கண்டி), நகுலேஸ்வரி (ஆசிரியர், குமுழமுனை மகாவித்தியாலம்), புவனேஸ்வரி (இத்தாலி), ஜெகதீஸ்வரி (ஆசிரியர், உண்ணப்புலவு தமிழ் வித்தியாலயம்) .ஜெகதீஸ்வரன், சுபாஜினிதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான மகாதேவன், சிங்கராசா, கமலநாதன், மற்றும் விமலாதேவி, ஜீவலதா (ஓய்வு பெற்ற ஆசிரியர்), இந்திராணி, சிவரதி, பாலநாதன், ஜெயசீலன் (வவுனியா வடக்கு ப.நோ.கூ. சங்கம்), சுதாமதி, தவச்செல்வன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பகீரதா, பிரதீபன், பிரதாபன், பிரசாந்தி, பிரமிளா, பிரசாத், சுஜீவன், சுபாஜினி, சுதேசன், மயூரன், சாருஜன், சரண்ராஜ், ஜெசிதா, யசோதா, நிசாந்தினி, கீர்த்தனா, கேசவி, கோகுலன், சதீஸன், கஜதீபன், அனோஜன், பவித்ரா, அஜித்ரா, சங்கீத், சனுஜா, கஜீபனா, கேனுஜன், அபிசயன், ஆகர்சன் ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2020) புதன்கிழமை பிற்பகல் 3மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முள்ளியவளை கற்பூரப்புல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-**

**2ஆம் வட்டாரம், முள்ளியவளை,**
**முல்லைத்தீவு.**

**குடும்பத்தினர்**

# கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ வதரிபீட விநாயகர் ஆலய மஹா சபைப் பொதுக் கூட்ட அறிவித்தல்

மேற்படி ஆலய மகாசபைப் பொதுக்கூட்டம் **எதிர்வரும் (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆலய மண்டபத்தில்** நடைபெறும்.

அத்தருணம் சகல **மகாசபை உறுப்பினர்கள் மாத்திரம்** கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**நா. காண்தீபன்**
**கௌரவ செயலாளர்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு 27 04 1955



இறப்பு 17 08 2020

## திருமதி கோபாலசிங்கம் கமலாதேவி (கமலா)

யாழ்.புங்குடுதீவு 2ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலசிங்கம் கமலாதேவி (கமலா) அவர்கள் 17.08.2020 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுப்பிரமணியம் கோபாலசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் செல்லம்மா (நாகம்மா) அவர்களின் அன்பு மகளும், சுப்பிரமணியம் தங்கமுத்து அவர்களின் மருமகளும் காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி தங்கரத்தினம், இராஜேஸ்வரி, இராசரத்தினம், பத்மராணி, மற்றும் உதயரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரியும், சயந்தன் (கனடா), சதீசன் (ஜேர்மனி), சர்மிளா (கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும், வாசுகி, ஸ்ரெலனி, சாந்தகுமார், ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தேனுஜா, சாய்னுஜா, சாய்வர்ஷா, காஜீசன், பவிசன், கபிஷகா, கவின், ஹனுஜன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 19.08.2020 புதன்கிழமை அன்று மு.ப 08.00 மணி முதல் பி.ப 02.00 மணி வரை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு அதனை தொடர்ந்து இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

தகவல்: குடும்பத்தினர்
இல.71/6, கொலிங்வுட் பிளேஸ்
கொழும்பு - 06

கணவர் - 0774989792
மகன் (சயந்தன்) - 4168302325
மகன் (சதீஷன்) - 004915211555098
மருமகன் (இமரு) - 4163021907

# மரண அறிவித்தல்

## திருமதி துரைராசா இராசலட்சுமி



தோற்றம் 06.06.1932 மறைவு 18.08.2020

பதிவாளர் வீதி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி துரைராசா இராசலட்சுமி நேற்று (18.08.2020) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரைசிங்கத்தின் அன்புச் சகோதரியும், பொன்னம்மாவின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சித்திராதேவி, சுபத்திராதேவி (செல்லம் - ஆஸ்திரேலியா) மற்றும் கமலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் பரமேஸ்வரன் (ஆஸ்திரேலியா) காலஞ்சென்ற லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இராமகிருஸ்ணன் (ராம்) சுஜிதா, பாபுசன், கௌஷா (ஆஸ்திரேலியா), ராயுசன், பிரியா, டனில் அம்ருதா, வைஷ்ணுயன், வினோசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2020) புதன்கிழமை பிற்பகல் 12.30மணியளவில் இடம்பெற்று பூதவுடல் செம்பாடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:-**

**பதிவாளர் வீதி, திருநெல்வேலி.**

**இராமகிருஸ்ணன் சுஜிதா**

**தொடர்பு:- 077 296 6926**

## பொலிஸ் அதிகாரிக்கு லஞ்சம் வழங்க முற்பட்டவர் கைது



கொழும்பு, ஓக.19

பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவருக்கு 2 இலட்சம் ரூபா லஞ்சம் வழங்க முற்பட்ட நபர் ஒருவரை தேசிய இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

கஞ்சா போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக் கைமுன்னெடுப்பதைத் தடுப்பதற்காக,இந்தநபர் தொம்பே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு லஞ்சம் வழங்க முற்பட்ட வேளையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## பொலிஸாருக்கு...

ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த நபர் கடந்த 4 மாதங்களாகத் தேடப்பட்டு வந்த நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து ஹெரோய்ன் போதைப்பொருள், ஆறரைப் பவுண் தங்க நகைகள், 20 பவுண் தங்க நகைகளை அடைவு வைத்தமைக்கான பற்றுச்சீட்டுக்கள், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, நகைகளை அடைவு வைத்த குற்றச்சாட்டில் அவரது மனைவியும், நகையை வாங்கிய குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"சாவகச்சேரி, மீசாலை சோலையம்மன் கோவிலடியில் உள்ள வீடொன்றுக்குள் கடந்த ஏப்ரல் 10ஆம் திகதி அதிகாலை நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் தனித்திருந்த வயோதிப தம்பதியைத் தாக்கிநகைமற்றும்பணம்ஆகியவற்றை கொள்ளையிட்டுத் தப்பித்தனர்.

அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவத்தில் 15 ஆயிரம் ரூபா பணம், 5 நகைகள் கொள்ளையிடப்பட்டன. சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேக நபரின் மருமகன் முறை உறவினர் சில நாள்களிலேயே கொள்ளையிடப்பட்ட நகையுடன் கைது செய்யப்பட்டார். சம்பவத்தில் பிரதான சந்தேக நபரைக் கைது செய்ய சாவகச்சேரி நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

அத்தோடு உடுவில் அம்பலவாணர் வீதியில் கடந்த மே 5ஆம் திகதி அதிகாலை வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளைக் கும்பல், வயோதிபத் தம்பதியைத் தாக்கிவிட்டு 5 தங்கப் பவுண் நகைகள் மற்றும் 5 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுத் தப்பித்தது. வயோதிபத் தம்பதியைக் கட்டிவைத்து விட்டு குடும்பத் தலைவரின் தலையில் கூரிய ஆயுதத்தால் கொத்திகொள்ளைக் கும்பல் சித்திரவதை செய்துள்ளது. அதனால் படுகாயமடைந்த குடும்பத் தலைவர், தெல்லிப்பழை வைத்திய சாலை அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றிருந்தார்.

இந்தச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபராக 45 வயதான நகுலேஸ் என்பவர் தேடப்பட்டு வந்தார். கடந்த 10ஆம் திகதி கொடிகாமத்திலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த மூன்றரைப் பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்ட சம்பவத்துடன் நகுலேஸ் நேரடியாகத் தொடர்புபட்டிருந்தார். பூநகரியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தின் போது சந்தேக நபரால் 15 ஆயிரம் ரூபா பணம் மற்றும் மோதிரம் என்பன கொள்ளையிடப்பட்டன.

இந்த நிலையிலேயே 5 மாதங்களுக்கு மேலாக தேடப்பட்டு வந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்" என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.(எ26)

## யன்னலால்...

எது. பூந்தோட்டம், கல்வியியற் கல்லூரிக்குப் பின்புறம் அமைந்துள்ள அரச ஊழியர் விடுதியிலேயே திருட்டு நடந்துள்ளது. அந்த வீட்டிலிருந்த குடும்பத்தினர் தொழில் நிமித்தம் வெளியே சென்றிருந்தபோது, திருடர்கள் யன்னல் ஊடாக வீட்டுக்குள் நுழைந்து நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுத் தொடர்பாக வீட்டு உரிமையாளர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ110)

## அங்கஜனின்...

தேர்தல் சட்டத்துக்கு முரணாக செயற்பட்டமைக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று, தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஈ.பி.டி.பி. கேள்வி எழுப்பியுள்ளது.

அங்கஜன் இராமநாதனும் அவரது சக வேட்பாளரும் தேர்தல் சட்டம் 79(2) பிரிவை மீறும் வகையில் பரப்புரையில் ஈடுபட்டனர். அத்துடன் இது தொடர்பான செய்திகள் ஊடகங்களிலும் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் கடந்த மாதம் 11ஆம் திகதி எழுத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்த நடவடிக்கை என்ன என்று கேட்டு ஈ.பி.டி.பி. தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது. (ஒ.5)

## தொண்டமானாறு...

என்பவரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் மோதியே இந்த விபத்து நடந்துள்ளது. சைக்கிளில் பயணித்தவரே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சிறு காயங்களுக்கு உள்ளானார்.

விபத்துத் தொடர்பாகவல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ26.25)

## 8 ஆண்டுகள்...

இடமாற்றுவது என்று அமைச்சு மட்டத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு பட்டதாரிகளுக்கு அரச வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலருக்கு வெளிமாவட்டங்களில் நியமனம் வழங்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் நியமனம் வழங்கப்பட்ட சுமார் 30பேர், தம்மை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யுமாறு கோரியுள்ளனர். மாவட்டச் செயலரும் அதற்குரிய அனுமதி வழங்கியுள்ளதுடன் நியமிக்கப்படவுள்ள புதிய உத்தியோகத்தர்களை பதிலீடாக மாவட்டத்துக்கு கோரியுள்ளார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு இடமாற்றக்கோரிக்கைகடிதம்முல்லைத்தீவு மாவட்டச் செயலரின் பரிந்துரையுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவட்ட நிலையில், அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் எதுவும் இல்லை. இந்த நிலையில், மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதன் ஊடாகவே, முல்லைத்தீவில் 8 ஆண்டுகள் கடமையாற்றிய உத்தியோகத்தர்களை இங்கு உள்ளீர்க்க முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

## 30,000 வாக்காளர்...

ஒவ்வொரு ஆண்டுக்கும் உரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் அந்த ஆண்டின் ஜூன் முதலாம் திகதி ஆரம்பமாவது வழமை. இந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் கொரோனாத் தொற்றுக் காரணமாக இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. விரைவில் இந்தப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் காங்கேசன்துறை தொகுதியில் உள்ளடங்கும் 21 கிராம அலுவலர் பிரிவுகளில் 18 கிராம அலுவர் பிரிவுகளில் முழுமையாகவும், 3 கிராம அலுவலர் பிரிவுகளில் பகுதியாகவும் மக்கள் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை. கடந்த காலங்களில் இந்தக் கிராம அலுவலர் பிரிவுகள் வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்படும்போது மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவதில்லை. கடந்த ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும்போது 21 கிராம அலுவலர் பிரிவுகளையும் மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மக்கள் மீளக்குடியமராத கிராம அலுவர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களை நாட்டின் எந்தப் பாகத்திலிருந்தாலும், வெளிநாடுகளிலிருந்தாலும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்தல் விடுத்து இதற்காக சிறப்பு விண்ணப்பப் படிவமும் தேர்தல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டிருந்தது. அரசியல் தரப்புக்களின் கடும் அழுத்தங்களையடுத்து இறுதி நேரத்தில் மீளாய்வுக்கு உட்படுத்தும் நடவடிக்கை கைவிடப்பட்டது. அத்துடன் இதுவே இறுதிச் சந்தர்ப்பம் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், தற்போது முன்னெடுக்கப்படவுள்ள வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கையின் போது 21 கிராம அலுவலர் பிரிவுகளையும் மீளாய்வுக்கு உட்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இதன் காரணமாக அந்தப் பகுதியைச் சேர்ந்த 30 ஆயிரம் வாக்காளர்கள் வரையில் நீக்கப்படும் அபாயம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# ரயில்வே களஞ்சியம் உடைத்துத் திருட்டு!

யாழ்ப்பாணம், ஓக.19

கோண்டாவிலில் உள்ள ரயில்வே களஞ்சியத்தை உடைத்து இனந் தெரியாதவர்கள் பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்று ரயில்வே களஞ்சியக் கண்காணிப்பாளர்கள் அங்கு சென்றபோதே திருட்டு நடந்துள்ளமை கண்டறியப்பட்டது என்றும், இது தொடர்பாக கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## நாடளாவிய...

கோளாறு காரணமாகவே மின் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் சுலக்சன ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த தொழில்நுட்பக் கோளாறைச் சீர் செய்ய 4 முதல் 5 நாள்கள் எடுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முழு நாடும் நான்கு வலயங்களாக பிரிக்கப்பட்டு இரண்டு கட்டங்களாக மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் கீர்த்தி கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

வார நாள்களில் முதலாவது வலயத்தில் முற்பகல் 10 மணி முதல் 11.45 மணிவரையும், இரவு 6 மணி முதல் 7 மணிவரையும், இரண்டாவது வலயத்தில் முற்பகல் 11.45 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரையும், இரவில் 7 மணி முதல் 8 மணிவரையும், மூன்றாவது வலயத்தில் பிற்பகல் 1.30 மணி முதல் பிற்பகல் 3.15 மணி வரையும், இரவு 8 மணி முதல் 9 மணி வரையும், நான்காவது வலயத்தில் பிற்பகல் 3.15 முதல் 5 மணி வரையும், இரசு 9 மணி முதல் 10 மணி வரையும் மின் துண்டிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## நல்லூரில்...

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவில் நேற்றுக் காலைத் தீர்த்தோற்சவம் இடம்பெற்றது.

இதன்போது உள்வீதியில் அடியவர்களின் வசதி கருதி தீர்த்த நீர் பாய்ச்சப்பட்டது. வயோதிபப் பெண் ஒருவர் தீர்த்தமாடும் போது, அவரது தங்கச் சங்கிலியை அறுத்து தப்பிக்க முயற்சித்ததாகக் கூறப்படும் தம்பதிகள் அங்கு கடமையிலிருந்த கண்காணிப்பு பொலிஸாரிடம் சிக்கினர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த கணவனும் மனைவியும் நல்லூர் உற்சவ காலத்தில் கொள்ளையிடும் நோக்குடன் வந்திருக்க முடியும் என்று சந்தேகிக்கப்படுவதாகப் பொலிஸார் கூறினர். (ஒ.5,26)

## மயங்கி....

பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தூர், கலைமதிப் பகுதியைச் சேர்ந்த உதயகுமார் சதீஷ் (வயது43) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் 3 பிள்ளைகளின் தந்தை என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் நேற்றுக் கூலி வேலைக்குச் சென்றிருந்தார் என்றும், வேலை செய்து கொண்டிருந்தபோது திடீரென மயங்கி வீழ்ந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. நீண்ட நேரம் அவர் எழுந்திருக்காத நிலையில் அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ25)

## 100 கோடி...

மில்லியனுக்கும் அதிகமான மின்சார யுனிட்கள் நாடு முழுவதும் வழங்கப்படுவதாக மின்சார சபை தெரிவித்துள்ளது. மின்சார வழங்கும் காலத்தில் மின்சார யுனிட் ஒன்றுக்கு 125 ரூபா பொருளாதார இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மின்சார தடையால் நீர் தடையும் நேற்று ஏற்பட்டது. கொழும்பின் பல பகுதிகளில் போக்குவரத்து தடையும் ஏற்பட்டு குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# இங்கிலாந்து - பாக். ஆட்டம் சமநிலை

லண்டன், ஓக.19

**இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிந்துள்ளது. ஆட்டத்தின் இடையே மழை அடிக்கடி குறுக்கிட்ட நிலையில் இரு அணித் தலைவர்களின் சம்மதத்துடன் ஆட்டம் சமநிலையில் முடித்துவைக்கப்பட்டது.**



இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த 13 ஆம் திகதி சவுத்தாம்ப்டனில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சி யில் வென்ற பாகிஸ்தான் அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. முதல் நாளே மழை குறுக்கிட்டதால் 45.4 பந்துப் பரிமாற்றங்களே வீசப்பட்டன. முதல் நாள் ஆட்ட முடிவின் போது பாகிஸ்தான் அணி ஐந்து இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இரண்டாவது நாள் ஆட்டத்தின் பெரும்பகுதி மழையால் பாதிக்கப்பட்டது. இரண்டாவது நாள் முடிவில் பாகிஸ்தான் அணி 9 இலக்குகள் இழப்புக்கு 223 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இரு நாள்களும் மொத்தமாக 86 பந்துப் பரிமாற்றங்களே வீசப்பட்டிருந்தன. இரண்டாவது நாள் 40.2 பந்துப் பரிமாற்றங்களே வீசப்பட்டிருந்தன.

மூன்றாவது நாள் ஆட்டம், மழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாது இரத்துச் செய்யப்பட்டது. நான்காவது நாள் ஆட்டத்தில் 91.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவடைந்திருந்த நிலையில், 236 ஓட்டங்களுக்குப் பாகிஸ்தான் அணி அனைத்து இலக்குகளையும் இழந்தது.

பாகிஸ்தான் அணி சார்பாக ரிஸ்வான் 72 ஓட்டங்களையும், பாபர் அசாம் 47 ஓட்டங்களையும், அபித் அலி 60 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். இங்கிலாந்து அணி சார்பாக புரோட் 4 இலக்குகளையும், அண்டர்சன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது. 5 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கு இழப்புக்கு 7 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. நான்காவது நாள் 10.2 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுமே வீசப்பட்டன.

ஐந்தாவது நாள் ஆட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமான போது. மழை தொடர்ந்ததன் காரணமாக தேநீர் இடைவேளை வரை ஆட்டம் நடைபெறவில்லை. அதன்பின்னர் ஆட்டம் தொடர்ந்த போதிலும், 4 இலக்குகளை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்டமையால் இங்கிலாந்து அணி ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

ஆட்டத்தை முடித்துக்கொள்ள இரு அணிகளின் தலைவர்களும் ஒப்புக்கொண்டதை அடுத்து, ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. தொடரின் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று முன்னிலையில் உள்ளது. தொடரின் மூன்றாவதும், கடைசியுமான ஆட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி நடை பெறவுள்ளது. (ரி2)



# சம்பியனானது வீனஸ்

கரவெட்டி, ஓக.19

கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்துக் கிரிக்கெட் போட்டித் தொடரில் வெற்றி பெற்று பருத்தித்துறை வீனஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை வீனஸ் அணியை எதிர்த்து, கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றனர். அவ்வணி சார்பில் நரேன் 16 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் கஜேந்திரன், பிரதீப் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், நிரோஜன் 2 இலக்குளையும், அமிர் 1 இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை வீனஸ் அணி 7.1 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்று சம்பியன் கிண்ணத்தச் சுவீகரித்தனர்.

அவ்வணி சார்பில் சாகித்தியன் 20 ஓட்டங்களையும், ராஜா 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் செந்தீஸ், ரஜீவன் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

சிறந்த ஆட்ட நாயகனாக பருத்தித்துறை வீனஸ் அணி வீரர் கஜேந்திரன், தொடர் ஆட்ட நாயகனாக அவ் அணியைச் சேர்ந்த விமல்ராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ரி2-422)



# மாலுசந்தி மைக்கல் கரப்பந்தில் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஓக.19

பிரித்தானியா, சுவிஸ்லாந்து, அல்வாய் ஒன்றியங்கள் மற்றும் கனடா வாழ் அல்வாய் மக்கள் ஏற்பாட்டில் நடத்தப்படும் இந்த ஆண்டுக்கான அல்வாய் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான 'ஓவர்கேம்' கரப்பந்தாட்டத் தொடரில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மின்னொளியில் கலைமணி விளையாட்டுக் கழக கரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் மாலுசந்தி மைக்கல் அணியை எதிர்த்து குரும்பகட்டி உதயசூரியன் 'ஏ' அணி மோதியது. இரு அணிகளும் தாம் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் ஆரம்பம் முதல் இறுதி வரை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஆட்ட நேர முடிவில் மாலுசந்தி மைக்கல் அணி 25 :20 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (எ-422)

# முதல்முறை சம்பியனானர் ஜெனிபர்

வொஷிங்டன், ஓக.19

'டாப் சீட்' பகிரங்க சர்வதேச டென்னிஸின் இறுதிப் போட்டியில், அமெரிக்காவின் ஜெனிபர் பிராடி சம்பியன் பட்டம் வென்றார். அமெரிக்காவின் லெக்சிங்டன் நகரில் 'டாப் சீட்' பகிரங்க சர்வதேச டென்னிஸ் போட்டி நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தின் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின்,ஜெனிபர் பிராடியும், சுவிட்சர்லாந்தின் ஜில் டீச்மனும் மோதினர்.

இதில், ஜெனிபர் பிராடி 6:3, 6:4 என்ற நேர் செட் கணக்குகளில் டீச்மனை தோற்கடித்து முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றார். (ரி2)



## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் அச்சகத்திற்கு தகுதியானவர்களிடம் இருந்து கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1). வரவேற்பாளர்கள்
2). Binding (முன் அனுபவம் தேவை)
3). வடிவமைப்பாளர் (Graphic Designer)

தகுதியானவர்கள் 24.08.2020 (திங்கட்கிழமை) முற்பகல் 10.00-12.00pm மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம்தரவும்.

**உதயன் பணிமனை**
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.